கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

518

2 அணா

கேட்டீர்களா!

முதல் பேனா நண்பர் சங்கம்

1936-இல்தான் முதல் முதலாக ஒரு பேனா நண்பர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதை ஆரம்பித்தவர் ஒரு பெண்மணி. மிஸ் எட்னா மெக்டனைப் என்பதே அவள் பெயர். அவர் தோற்றுவித்த சங்கம் சர்வதேச நட்புச் சங்கம். உலகத்தின் ஒரு கோடியிலுள்ளவர்கள் மற்றொரு கோடியிலுள்ளவர்களோடு நட்புக் கொள்ளும்படி செய்வதே பேனா நண்பர்கள் சங்கத்தின் லட்சியம். இன்று அந்தச் சங்கம் ஒரு பெரிய ஸ்தாபனமாகக் காட்சியளிக்கிறது.

இந்தியச் செய்திப் படம்

இந்திய செய்திப் படங்களை இந்திய அரசாங்கத்தின் திரைப் படப் பிரிவு தயாரிக்கிறது. உலகிலேயே செய்திப் படத் தயாரிப்பு ஸ்தாபனங்களில் இதுவே பெரியது. இந்தத் திரைப்படப் பிரிவின் தலைமைக் காரியாலயம் பம்பாயில் இருக்கிறது. 1949-இல் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. அது முதல் எம். பவ்னானி என்பவர் இதன் தலைவராக இருந்து வருகிறார். வருஷத்துக்கு 40 செய்திப் படங்களும் 52 செய்திக் கதிர்களும் தயாரிக்கப்படுகின்றனவாம்.

குழந்தை இலக்கியக் கழகம்

குழந்தை இலக்கியக் கழகத்தின் 4-ஆவது ஆண்டுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. கீழ்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஜெ. எத்திராஜர் தலைவர்; பூவண்ணன் - செயலாளர்; இ. எஸ். ஹரிஹரன் - துணைச் செயலாளர்; பூ. குருசாமி - பொருளாளர்; புவனை கலைச் செழியன், நீலமணி, ந. சந்திரன். ப. ராகவேந்திரன், ந. மோகனகிருஷ்ணன் - நிர்வாகக் குழுவினர்.

தாஜ் மஹால் பறக்கிறது

10 அடி உயரமுள்ள வெண் சலவைக் கல 'குட்டி' தாஜ்மஹால் அமெரிக்க நகரங்களில் கண்காட்சியில் காட்டப்படுவதற்காக விமானத்தில் அனுப்பப்பட்டுள்ளது. 'இந்தியாவின் கீர்த்தி' என்ற ரத்தின கம்பளமும் அதனுடன் அனுப்பப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 18,000 ரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்டிருக்கிறதாம். சிறந்த வேலைப்பாடு அமைந்த இந்த கம்பளத்தை 30 பேர் ஒன்றரை வருஷ காலம் உழைத்துந் தயாரித்தார்களாம். புராதன இந்தியா கைத்தொழிலில் எவ்விதம் சிறந்து விளங்கியது என்பதற்கு இது ஒரு சின்னம். இதன் விலை மதிப்பு ரூ. 12,50,000.

மாஹி விடுதலை

மேற்குக் கடற்கரை ஓரத்தில் இருக்கிறது மாஹி. இது பிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்த இந்தியப் பகுதி. 230 ஆண்டுகளுக்கு முன்னால் பிரெஞ்சுக்காரா இதைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இப்போது அந்தப் பிரதேசத்தின் ஆட்சிப் பொறுப்பை இந்தியர்கள் வசமே மாற்றிவிட்டது பிரெஞ்சு சர்க்கார். மாஹி இனி இந்திய யூனியனில் சேர்ந்துவிடும்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 15

1-8-'54

குழந்தைகளே!	பக்கம்	2
லீடர் மணி	..	3
பரிசு	..	9
நினைத்ததும் நடந்ததும்	..	13
மாம்பழக் கூடை	..	19
ஏரிக்கரையில்	..	21
கண்ணன் கழக அங்கத்தினர்கள்		27
ஸ்ரீமான் சுதர்சனம்	..	29
தூங்கும் அழகி	..	31
சந்திரகிரிக் கோட்டை	..	33
கேளுங்கள், சொல்கிறேன்!	..	37
எங்கள் பகுதி	..	39

கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை

கண்ணன் கிளைக் கழகம் - மூன்றாவது அட்டை

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

சீட்டுப் பைத்தியம்

தாமு: மணி! இவாளுக்கெல்லாம் சீட்டுப் பைத்தியம் உண்டு போலிருக்குடா! வாயைப் பாரேன், அசல் சீட்டு மாதிரியே இருக்கு!

குழந்தைகளே!

பரிசுப் போட்டியின் முடிவு இந்த இதழில் வெளியாகும் என்று எதிர்பார்த்திருப்பீர்கள். நானும் எவ்வளவோ முயன்று பார்த்தேன். ஆயினும் எல்லாக் கதைகளையும் இன்னும் படித்து முடியவில்லை. கதைகள் ஏராளமாக வந்திருப்பதால் இந்த இதழ் வெளிவருவதற்குள் தேர்ந்தெடுக்க முடியவில்லை. அடுத்த இதழில் பரிசுக் கதையை நீங்கள் கட்டாயம் எதிர்பார்க்கலாம்.

இந்த இதழில் அருமையான சம்பவம் ஒன்று வெளியாகியிருக்கிறது. படித்துப் பாருங்கள். அருமையான சம்பவம் என்று சிலர் ஒரு பெரிய கதையையே எழுதி யனுப்பியிருக்கிறார்கள். சிலர் அருமையாயில்லாத சாதாரண சம்பவங்களாக எழுதியிருக்கிறார்கள். எதற்கும் இந்தப் பகுதி ஆரம்பித்து இரண்டு மூன்று இதழ்கள் வந்தால்தான் உங்களுக்கு எத்தகைய சம்பவங்களை எப்படி எழுதினால் நன்றாய் இருக்கும் என்று படும் என்று எண்ணுகிறேன்.

சென்ற இதழில் ஒரு தவறு ஏற்பட்டு விட்டது. அதனால் உங்களுக்கு மிகுந்த தொந்தரவு தர நேர்ந்ததற்கு வருந்துகிறேன். 'தூங்கும் அழகி'யில் தான் அந்தத் தவறு ஏற்பட்டுவிட்டது. இந்த இதழில் வரவேண்டிய பகுதி தவறுதலாகப் போன இதழில் வந்துவிட்டது; அதனால் தொடர்ச்சியில்லாமல் போய்விட்டது. இந்த இதழில் விட்டுப்போன பகுதியுடன் அந்தப் பகுதியும் சேர்ந்து வெளியாகிறது. 1-7-54 இதழுக்குப் பிறகு 1-8-54-இல் வெளியாகும் பகுதிதான் தொடர்ச்சி. நடுவில் வெளியானதை விட்டுவிடுங்கள். இந்தத் தவறு, அதுவும் கண்ணனில் நேர்ந்ததற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். "ஒருகால் நாங்களும் தூங்குகிறோமா இல்லையா என்று பார்ப்பதற்காக நீங்கள் இப்படி வெளியிட்டிருக்கிறீர்களோ?" என்று ஒரு பையன் அழகாகக் கேட்டிருக்கிறான். "அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்" என்று பதில் எழுதிவிட்டேன். அப்படியும் ஒரு பரீட்சை செய்து பார்த்தால்தானே எவ்வளவு பேர் அதை விரும்பிப் படிக்கிறார்கள் என்பது தெரியும்?

கண்ணன் கழக வெளியீடுகளுக்கு அங்கத்தினர்களுக்கும் சந்தாதார்களுக்கும் எத்தனை கமிஷன் என்று பல குழந்தைகள் கேட்டிருக்கிறார்கள். ரூபாய்க்கு இரண்டணா கமிஷன் உண்டு. ஐந்து ரூபாய்க்கு வாங்குகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நாலு ரூபாய் ஆறணா அனுப்பினால் போதும். முன்பணம் அனுப்புகிறவர்களுக்குத் தபால் செலவில்லாமல் புத்தகம் அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். சிலர் விலைப்பட்டியல் கிடைக்கவில்லை என்று எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் அனுப்பி வருகிறோம்.

லீடர் மணியைப் பாராட்டிக் கணக்கு வழக்கில்லாத கடிதங்கள் வந்துள்ளன. அவ்வளவு பேருக்கும் நன்றி.

—ஆசிரியர்.

புதிய தொடர் நாவல்

லீடர் மணி

'ஆர்வி'

அங்கே அவர்கள் தெருப் பையன்தான் வந்துகொண்டிருந்தான். மாலையில் மணிக்குப் பள்ளிக்கூடத்து விதி முறைகளைச் சொல்வதாகக் கூறினானே, அந்தப் பையன்தான்.

அவன் அருகில் வந்ததும், "உன் பெயர் என்ன?" என்று கேட்டான் மணி.

"என் பெயர் குமார்! தம்பி என்று வீட்டிலே கூப்பிடுவா!" என்றான் அவன்.

"என்னையும் வீட்டிலே மணி என்றுதான் கூப்பிடுவது வழக்கம்."

"அது சரி; மத்தியானம் உனக்கு ஒரு மாதிரியாப் போயிடுத்து இல்லே?"

"உம்.. இதுக்கெல்லாம் நானா பயப்படுவேன்?" என்று விட்டுக் கொடுக்காமல் பெருமை பீற்றிக் கொண்டான் மணி.

"எனக்குக்கூட வருத்தமாய் இருந்தது. புதிசா வந்த பையனை இப்படியா கோட்டா பண்றது? சுத்த மோசம்!"

"என்ன பண்றது? தெரியாமெ வந்து சேர்ந்துட்டேனே, இந்தப் பள்ளிக்கூடத்துலே."

"உனக்கு இந்தப் பள்ளிக்கூடம் பிடிக்கல்லியா?"

"ஊஹூம்."

"ஏன்?"

"இந்த மாதிரி வாத்தியாரும் இந்த மாதிரிப் பையன்களும் இருந்தா யாருக்குத்தான் பிடிக்குமாம்?"

"அட பாவமே! நீ நினைக்கிறது தப்பு. இந்த வாத்தியார் ரொம்ப நல்லவர். முதல்லே அப்படித்தான் இருக்கும். அப்புறம் போகப் போகத் தெரியும். பையன்களும் அவ்வளவு மோசமில்லே. நீ புதுசு. அதனாலே இப்படி நினைக்கிறே!" என்றான் குமார்.

மணிக்கு அப்படியும் இருக்கலாமோ என்று தோன்றியது. ஆனால் குமார் வீடு இதற்குள் வந்துவிட்டது.

"அதோ, வாசலில் கம்பி போட்டிருக்கு, பார்! அதான் என் வீடு. நாளைக்குப் பள்ளிக்கூடம் போற

போது இங்கே வர்றியா? சேர்ந்து போகலாம்!'' என்றான் குமார்.

''சரி வர்றேன்'' என்றான் மணி. இருவரும் பிரிந்து சென்றார்கள்.

மணிக்கு உற்சாகமாயும் இல்லை; வருத்தமாயும் இல்லை. புதிய ஊர் அவனுக்குக் கொஞ்சமும் வசதியாகப் படவில்லை. மூங்கிலடி என்றால் புத்தக மூட்டையைத் தூக்கிப் போட்டுவிட்டு அவன் இஷ்டப்படி போய் விளையாடப் பல இடங்கள் இருந்தன. விளையாட ஆள் அகப்படாவிட்டாலும் பழகிய இடங்களில் எல்லாம் ஒரு முறை சுற்றி வந்தாலே போதும். பழகிய நண்பனோடு பேசிவிட்டு வந்ததுபோல இருக்கும். ஆனால் இங்கேயோ எங்கே பார்த்தாலும் வீடுகள். எங்கே பார்த்தாலும் முகம் தெரியாத புது மனிதர்கள். தெருவெல்லாம் கிராமத்தைப்போல் சுத்தமாகவே இல்லை. குப்பை மேடுகளும் எச்சிற்கலைகளும் சாம்பல் கட்டிகளும் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் குவிந்து கிடந்தன. மறுநாள் காலையில் குப்பை வண்டி வந்து சுத்தப்படுத்தும் வரையில் தெருவில் பயமில்லாமல் நடமாட முடியாது.

''நகரம் என்றால் நாகரிகமாக இருக்காதோ? நரகம்போல இருக்கிறதே!'' என்று மணி தனக்குள் எண்ணிக்கொண்டான். 'என்ன செய்வது? இனி, இந்த ஊரில் இருந்துதான் படித்து முடித்தாக வேண்டும். எப்படித்தான் இருக்கப்போகிறேனோ? எப்படித்தான் படிக்கப் போகிறேனோ?' என்று அவன் தனக்குள்ளேயே மலைத்தான்.

அவனுடைய அத்தைக்கு ஒரு பெண்ணும் பிள்ளையும் இருந்தார்கள். அந்தப் பையன் மணியைவிட இரண்டு வயசு மூத்தவன். பெண் அவனைவிட இரண்டு வயசு சின்னவள். அவர்கள் இருவரும் மணியை ஏதோ வேடிக்கைப் பொருளைப் பார்ப்பதுபோலப் பார்த்தார்கள். ஆனால் மணியோ மிகவும் பிரியமாக, ''அத்தான்! நான் பள்ளிக்கூடத்தில் உன்னைத் தேடிப் பார்த்தேன். உன்னைப் பார்க்க முடியவில்லையே!'' என்றான்.

அத்தானுக்கு மணியின் பேச்சு பிடிக்கவில்லை. ''டேய், என்னை அத்தான், சொத்தான் என்று கூப்பிடாதே! ராமு என்று அழகாய்க் கூப்பிடேன்!'' என்று எரிச்சலோடு சொன்னான்.

மணிக்கு மனசு இடிந்து போயிற்று. அவனுடைய அத்தான் ராமு எப்போதுமே இப்படித்தான். ஊரிலிருந்து வந்திருக்கிறானே என்ற பிரியமோ ஆசையோ அவனுக்குக் கொஞ்சங்கூடக் கிடையாது. ஆனால் மணி மட்டும் அவனிடமும் சரி, அவன் தங்கை கமலாவிடமும் சரி, ரொம்பப் பிரியமாக இருப்பான். அவர்கள் மூங்கிலடிக்கு எப்போதோ ஒரு தடவைதான் வந்தார்கள். அவர்களைத் தன் நண்பர்களையெல்லாம் அழைத்து வந்து ஆசையோடு காட்டினான். ராமுவோ ரொம்ப மதிப்பாக 'உம்'மென்று ஒருவரிடமும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். ''பெரிய கர்வியாயிருப்பான் போலிருக்கே!'' என்று ஒரு பையன் மணியிடம் சொன்னான். மணிக்கும் அப்படித்தான் இருக்குமோ என்றுகூடத் தோன்

றியது. ஆனால் அத்தான் என்கிற ஆசையில் அது தெரியவில்லை. "போடா, டவுனிலிருந்து வந்தால் எல்லாருமே அப்படித்தாண்டா இருப்பார்கள்!" என்று பூசி மழுப்பி விட்டான்.

பள்ளிக்கூடத்தில் சேர வந்த அன்றுகூட, "அத்தை, அத்தான் எங்கே?" என்று கேட்டான் மணி.

"அவன் முந்தியே போயிட்டான். நீ வரப்போறேன்னுகூட சொன்னேன். என்னமோ வேலையிருக்குன்னு முன்னால் போயிட்டான்!" என்றாள் அத்தை.

மணிக்கு அப்பொழுதும் ராமுவின்மேல் குற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. தன்னைப்போலவே அவனும் தன்னிடம் ஆசையாக இருப்பான் என்று நம்பினான். ஆனால் சாயங்காலம் வந்ததும் வராததுமாக ஒரு வார்த்தை அன்பாகப் பேசாமல், "அப்படிக் கூப்பிடாதே. இப்படிக் கூப்பிடாதே!" என்று வெடுவெடுப்பாக அவன் சொன்னது பெருத்த ஏமாற்றமாக இருந்தது. முகத்தில் அடித்ததுபோல இருந்தது.

அவன் தங்கை கமலாவும் எட்டியேதான் நின்றாள். மாமா பிள்ளையாச்சே என்ற அன்பு அவளுக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. மணிக்கு வருத்தம் தாங்கவில்லை. ஊரில் அப்பா, சித்தி இரண்டு பேருமே அவனிடம் அன்பாகப் பேசியதில்லை. இங்கே வந்தால் இங்கேயும் அன்போடு, ஆதரவோடு அவனிடம் பேச ஒருவருமில்லையே! பள்ளிக்கூடமும் அப்படித்தான் இருந்தது. வாத்தியார் என்னடா என்றால் வந்ததும் வராததுமாகக் கோட்டா பண்ணிவிட்டார். பையன்கள் எல்லாரும் பரிதாபமே இல்லாமல் சிரிக்கிறார்கள். வந்த முதல் நாளே இப்படி இருக்கிறதே என்று

மணிக்கு ஏக்கம் பிடித்து விட்டது.

அத்தை மட்டும் கொஞ்சம் ஆதரவாகப் பேசினுள். ஆனல் கொஞ்சம் முன் கோபக்காரியாக இருப்பாள் போலிருந்தது. அத்திம்பேர் அவனுக்கு மற்ருெரு முறையில் மாமாவாக வேண்டும். அவரும் பிரியமாகத்தான் இருப்பார் போலிருந்தது. ஆனல் எதற்கும் போகப் போகத்தான் இவர்கள் எல்லாரும் எப்படி என்று கண்டு பிடிக்க முடியும். அதற்குள் ஒன்றும் சொல்ல முடியாது.

"சித்தி எப்படிடா இருக்கிருள்? சோறு கிறு போடுகிருளா, சண்டை போடுகிருளா?" என்ருள் அத்தை.

மணிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. சண்டையும் போடுகிருள்; சோறும் போடுகிருள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனல் வெட்கப்பட்டுக் கொண்டு ஒன்றுமே சொல்லவில்லை.

சாப்பாடு ஆனதும் மணி ஒரு ஜமுக்காளத்தையும் தலையணையையும் எடுத்துக்கொண்டு தாழ்வாரத்தின் ஒரு மூலையில் போய்ப் படுத்துக்கொண்டான். ஒருவரும் அவனிடம் பேசவில்லை. ஏதோ குருட்டு யோசனை செய்தவாறு மணி படுத்துத் தூங்கிப் போனுன்.

காலையில் அவனுக்குப் புது இடம் அசௌகரியமாகத்தான் இருந்தது. அவன் வெளி வாசல் போய்விட்டு வந்த பிறகுகூட, ராமு இன்னமும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. கமலா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். காலையில் எழுந்ததுமே அவள் ஒரு முறை அழாமல் இருக்கமாட்டாளாம்.

ராமு எழுந்து வருவதற்காக மணி வெகு நேரம் காத்திருந்தான். எதற்கும் அவனை இன்னும் கொஞ்சம் நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று மணிக்கு ஆசை. அவன் வந்ததும், "ராமு! பள்ளிக்கூடம் போகும்போது என்னையும் அழைத்துக்கொண்டு போகிருயா? எனக்கு வழி சரியாகத் தெரியாது!" என்ருன்.

ராமுவின் மனசு எப்படி இருக்கிறது என்று கண்டு பிடிப்பதற்காகவே இப்படிக் கேட்டான். ராமுவோ, "வழி தெரியாமல் என்னடா? இப்படியே போய் வலது பக்கம் திரும்பி, தேர்முட்டித் தெருவோடு போனுல் தன்னுல் தெரிகிறது. பெரிய டவுனே இது? திக்குத் திசை புரியாமல் போய்விட்டதோ உனக்கு?" என்ருன் அலட்சியமாக.

மணிக்கு ஏன் இவனைக் கேட்டோம் என்று ஆகிவிட்டது.

"ஏண்டா, அவனை அழைச்சிண்டு போனுல் என்ன?" என்று அத்தைக்கூடக் கேட்டாள்.

"என்னம்மா, வழி தெரியாமல் போய்விடுமோ? எப்படித்தான் தெரிஞ்சுக்கறதாம்? என் கிளாஸ் வேறே, அவன் கிளாஸ் வேறே. என் சிநேகிதப் பையன்களோடே நான் போகப் போறேன். இவன் எல்லாம் என்னேடே வரப்படாது" என்று அடித்துப் பேசினுன் ராமு.

மணியும் ரோசமாக, "வேண்டாம் அத்தை! நான் எப்படியாவது தனியாகப் போயிக்கிறேன்" என்ருன்.

"பின்னே ஏன் என்னைக் கேட்டாய்?" என்றான் ராமு,

"தப்பு.. தப்பு.. தப்பு!" என்றான் மணி.

மணிக்கு வீடு தட்டுக் கெடாமல் இருப்பதற்காக, குமார் தன் வீட்டு வாசலில் தயாராகக் காத்திருந்தான். இருவரும் சேர்ந்து பள்ளிக்கூடம் போனார்கள். குமார் மிகவும் கலகலப்பாகப் பேசினான். ரொம்பப் பிரியமாக இருந்தான். அவனுடைய அப்பா அந்த ஊரில் பெரிய வக்கீல் என்றும் குமார் அவருக்கு ஒரே பிள்ளை என்றும் மணி விசாரித்துத் தெரிந்து கொண்டான். குமாரின் பையில் காசு குலுங்கிக்கொண்டேயிருந்தது. போகும் வழியில் இருந்த ஷாப்பில் அவன் பப்பர்மெண்ட், பென்சில், ரப்பர் என்று வேறு கணக்கில் வாங்கிக்கொண்டான். மணிக்கு அரையணா சாக்லேட் ஒன்றை ரொம்பத் தாராளமாகக் கொடுத்து, "உம்; சும்மா எடுத்துக்கோ!" என்று சொன்னபோது மணிக்கு ஆச்சரியமாய் இருந்தது. சாக்லெட்டை வாங்கிக்கொள்ளவே பயமாக இருந்தது. குமார், "எங்க அப்பாவோ அம்மாவோ ஒன்றும் சொல்லமாட்டாடா! வாங்கிக்கோ!" என்று வற்புறுத்திச் சொன்ன பிறகுதான் அதை மணி வாங்கிக்கொண்டான்.

குமாரை அவனுக்கு உடனேயே பிடித்து விட்டது. ஆனால் அவனிடம் ஒரே ஒரு குறை! பள்ளிக்கூடத்தின் விதி முறைகளை அவன் மூச்சுத் திணறும் வரையில் சொல்லிக்கொண்டேயிருந்தது தான் மணிக்குப் பிடிக்கவில்லை. பேச்சை வேறு எப்படித் திருப்பினாலும் குமார் பள்ளிக்கூடப் பேச்சையே எடுத்துக் கொண்டிருந்தான்.

"வாத்தியார் வந்ததும் எல்லாரும் எழுந்திருக்க வேண்டும். எழுந்திருந்து விட்டு உடனே உட்காரப் படாது. வாத்தியார் உட்காரச் சொல்லும் வரையில் உட்காரப்படாது...." குமாரின் தொண தொணப்பு மணியின் வேகம் நிறைந்த மனசுக்குப் பிடிக்கவேயில்லை.

"அது எப்படியோ போகட்டும். நான் சரி பண்ணிக்கொண்டு விடுகிறேன்!" என்று அவன் பேச்சை முடித்தான்.

"சாயங்காலம் 'புட்பால் கிளப்'புக்குப் போகலாமா?" என்றான் குமார்.

"அப்படின்னு ஒரு கிளப்பா? அங்கே என்ன கிடைக்கும்? எங்கிட்டே காசு எது?" என்றான் மணி. குமார் விழுந்து விழுந்து சிரித்தான். மணிக்குச் சட்டென்று கோபம் வந்தது. "சரிதான்! நீயும் இப்படித்தானா? தெரியாமல் கேட்டால் பெரிசா கேலி பண்றியே!" என்றான் மணி.

குமார் உடனே சிரிப்பை அடக்கிக்கொண்டு அந்த ஊர் புட்பால் கிளப்பைப் பற்றி விளக்கிச் சொன்னான். புட்பால் கிளப்பில் அவனும் ஒரு மெம்பர். அந்த வருஷம்தான் சேர்ந்திருக்கிறான். கால்பந்து விளையாட்டு என்றால் அவனுக்கு உயிராம்.

"சரி; சாயங்காலம் அங்கே போய்விட்டு வரலாம். நானும் வருகிறேன்" என்று மணி ஒப்புக் கொண்டான்.

மணி இதுவரையில் புட்பாலைத் தொட்டதேயில்லை. அதைப் பார்த்திருக்கிறானே தவிர ஆடிய

தில்லை. அவ்வளவு பெரிய பந்தை உதைத்தால் கால் போய்விடுமே என்று மனசுக்குள் ஒரு சந்தேகம் மட்டும் இருந்தது. ஆனால் எதையும் வெளியில் சொல்லி, தனக்கு ஒன்றும் தெரியாது என்று காட்டிக் கொள்ளலாமா? அது அவமானமாச்சே என்று பேசாமல் இருந்து விட்டான்.

பள்ளிக்கூடத்தில் குமார் மணியை மற்ற மாணவர்களுக்கு முடிந்த வரையில் அறிமுகப் படுத்தினான். அந்த ஊர் மாணவிகள் பையன்களோடு பேசுகிற வழக்கம் இல்லை. அதனால் அவர்கள் மணியை அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். குமார் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தும்போது அவர்கள் கவனித்துத் தெரிந்து கொண்டார்கள். மணிக்கு இன்று அவ்வளவு கவலையாக இல்லை. கூடுமான வரையில் அவன் சமாளித்துக்கொண்டு கலகலப்பாக இருக்க முயன்றான்.

மற்றப் பையன்கள் பேசியதைப் பார்த்தபோது அவனுக்குப் பல விஷயங்கள் தெரியாமல் இருப்பதை உணர்ந்தான். எவ்வளவோ விஷயங்கள் அவனுக்குத் தெரிய வேண்டியிருந்தது. பட்டிக்காட்டிலிருந்து வந்திருக்கிறோமே என்ற சிறுமையான உணர்ச்சி அடிக்கடி உண்டாயிற்று. அவன் தன்னை மிகவும் கேவலமாக எண்ணிக்கொண்டான். எப்படித்தான் இந்த ஊரில் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளப் போகிறோமோ என்ற பயத்துடன் அவன் யாரிடமும் அதிகமாகப் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

(தொடரும்)

அருமையான சம்பவம்

என் சகோதரனுக்குத் திருச்சியில் கல்யாணம். எல்லோரும் வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசிக்கொண்டே பிரயாணம் செய்தோம். இரவு இரண்டு மணி இருக்கும். விருத்தாஜலம் ஜங்ஷனில் ஒரு கோஷ்டியாக இறங்கி, சூடாகக் காபி கிடைக்குமா என்று மூலைக்கு ஒருவராகப் பார்த்தோம்.

இதற்குள் ரெயில் ஊதிவிட்டது. எல்லோரும் தடதடவென்று ஓடி வந்து ஏறிக்கொண்டோம். வண்டி வெகுதூரம் போன பிறகுதான் என் சகோதரனைக் காணவில்லை என்றுதெரிந்தது.

"அடுத்த வண்டியில் ஏறி இருப்பான்!" என்றார் என் மாமா.

திருச்சியில் போய் இறங்கினோம். என் சகோதரனைக் காணவேயில்லை. பெண் வீட்டார் வந்தபோது எல்லோரும் பதில் சொல்ல முடியாமல் பேந்தப் பேந்த விழித்தோம். வாசலில் வந்து நின்ற லாரியிலிருந்து சாமான்கள் இறங்கிக்கொண்டிருந்தன.

வாசல் திண்ணையில் என் சகோதரன் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"எப்படியடா வந்தாய்?" என்றார் என் மாமா. "இதோ, இந்த லாரியில்தான். சென்னையிலிருந்து கல்யாணத்துக்குச் சாமான் ஏற்றி வருகிறது இந்த லாரி!" என்றான் சகோதரன்.

என் சகோதரனைத் தற்செயலாகச் சந்தித்து ஏற்றி வராமல் போயிருந்தால்—?

—வி. வெங்கடசுப்பிரமணியன்
சென்னை-5.

பரிசு

பி. என். குமார்

அந்த வகுப்பு மாணவர்களுக்கு என்னவோ, மாணவிகளைக் கண்டால் சற்று நடுக்கம்தான். அவர்களுக்கும் மாணவிகளுக்குச் சரிசமமாக வாயாடத் தெரியும். இருந்தாலும் என்ன, அவர்களுடன் பேச வேண்டியிருக்கும்போது, மாணவர்கள் சற்றுத் தயங்கத்தான் தயங்குவார்கள்.

அந்த வகுப்பு மாணவர்களின் அபிமானத்திற்குப் பெரிதும் உட்பட்டிருந்தார் அவர்கள் தமிழாசிரியர். எப்பொழுதோ அவர் தம் பிறந்த நாளைக் கூறியபோது சிறுவர்கள் அதைக் குறித்து வைத்துக் கொள்ளத் தவறவில்லை. இன்னும் அவர் பிறந்த நாளுக்கு ஒரு வாரமே இருந்தது. கூடியவரையில் பணம் திரட்டி அவருக்கு ஏதாவதொரு நல்ல பொருளை வாங்கிப் பரிசளிக்கத் திட்டமிட்டார்கள். ஆனல் அவ்வகுப்புப் பெண்கள் இதற்கு ஒத்துவர மறுத்துவிட்டார்கள்.

“நாங்கள் முடிவாகக் கூறியாயிற்று. நாங்களெல்லாம் தனியாகத்தான் பரிசளிக்கப் போகிறோம். நீங்க ‘பாய்ஸ்’ எல்லாம் சேர்ந்துகொண்டு தனியாகப் பரிசளியுங்களேன்! யார் வேண்டாம் என்றது?” என்று, எந்த மாணவன் எந்தப் பெண்ணைக்

கேட்டாலும் அந்த 'வாயாடி' விமலாதான் முந்திக்கொண்டு வந்து பதிலளித்தாள்.

"என்னடா, மணி? நாம் தனியாகவே, தமிழாசிரியருக்குப் பரிசளித்தால் என்ன? எதற்காகச் சேர்ந்து ஒரே பரிசாக அளிக்கலாம் என்று அவர்களிடம் எங்களை ஏவி விடுகிறாய்?" என்று கேட்டான் முகுந்தன்.

"நிறையப் பேர் இருந்தால் நிறையப் பணம் சேரும். அதனால் தான். பரவாயில்லை! இனியும் அவர்களிடம் போய்க் கேட்டு, நம் மதிப்பை விட்டுக் கொடுக்க வேண்டாம். நாம் தனியாகப் பரிசளித்தால் போதும்!" என்றான் மணி. நிதி திரட்டும் படலம் துவங்கியது. மாணவர்கள் தம்மால் கொடுக்க இயன்றபடி எட்டணாவும் ஒரு ரூபாயுமாகப் போடலானார்கள்.

இரண்டு நாட்கள் நகர்ந்தன. மாணவிகளின் பரிசளிப்புத் திட்டத்தைப் பற்றி மாணவர்களுக்கு ஒரு செய்தியும் கிட்டவில்லை. ஆனால் அவர்களுக்கு ஆவல்.

மாணவர்களிடம் பணம் சேர்ந்தாகிவிட்டது. என்ன பொருளைப் பரிசாக அளிக்கலாம் என்ற பிரச்னை! கடைசியில் முகுந்தன் கூறியபடி, முகக்ஷவரம் செய்து கொள்ளும் மின்சாரக் கருவியைப் பரிசளிக்க நிச்சயித்தனர்.

இரண்டு, மூன்று மைல்களிலிருக்கும் டவுனில் இருந்த தெரிந்த கடைக்கு, மணி சைக்கிளில் புறப்பட்டான்.

அவன் திரும்பி வந்தபோது, மாணவர்கள் வாடிய முகத்துடன் காணப்பட்டார்கள். குடுமிக் கிட்டுவே முந்திக்கொண்டு, "டேய் மணி, இன்று காலை நான் தமிழ் வாத்தியார் வீட்டிற்குப் போக நேர்ந்தபோது, அவர் ஒரு மின்சார முகக்ஷவரக் கருவியை உபயோகித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்!..இப்போது என்னடா செய்வது?" என்றான். மணி இதைக் கேட்டதும் இடிந்து போய்விட்டான். வேறு பொருள்தான் வாங்கியாக வேண்டும். 'வேறு பொருள்' எதுவாக

இருந்தால் நன்றாயிருக்கும்! கடையில் சேர்ந்திருக்கும் பதிமூன்று ரூபாய்களுக்கு ஒரு 'ஸ்வான்' பேனாவும் ஒரு ஸ்க்ரூ பென்சிலும் வாங்கலாம் என்று முடிவாயிற்று.

தெரிந்த கடைதானே! மணி மறுபடியும் சைக்கிளில் கிளம்பிப் போனான்.

* * *

மணிக்கும் மற்றவர்களுக்கும் மாணவிகளின் பரிசளிப்பு எந்த நிலையில் இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ள ஆவல் அளவுக்கு மீறிப் போய்விட்டது. மணி அன்று மாலை மெள்ள விமலாவைக் கேட்டான்:

"உங்கள் பரிசளிப்புத் திட்டம் எந்த நிலையில்?"

"எல்லாம் தயாராகிவிட்டது!"

"பரிசு என்னவோ?"

"அது உனக்கு எதற்கோ?.. நீங்கள் அளிக்கப்போகும் பரிசு என்ன என்பதைச் சொன்னால் நானும் கூறுகிறேன்."

மணி முதலில் சற்றுத் தயங்கினான். பின்பு, "ஒரு 'ஸ்வான்' பேனாவும் ஸ்குரூ பென்சிலும்.." என்றான்.

விமலா திடுக்கிட்டு எழுந்தாள்.

"உங்கள் புத்தியைக் காண்பித்து விட்டீர்களே! இரவல் புத்தி! சொந்த புத்தியே கிடையாது! நாங்கள் வாங்கி வைத்திருப்பதைத் தான் நீங்களும் தரவேண்டுமோ? எந்தவிஷயத்திலுமா 'காப்பி'யடிக்க வேண்டும்?" என்று மேல் ஸ்தாயியில் கத்திய விமலா, சற்றுத் தூரத்தில் போய்க்கொண்டிருந்த அதே வகுப்பு மாணவி கமலியைக் கண்டதும், "அடி கமலீ! இந்தப் பையன்கள் செய்திருக்கும் கூத்தைப் பாரடி!" எனக் கத்திக்கொண்டே அவளை நோக்கி விரைந்தாள்.

"இதைப் பாரடா, மணி! நாங்கள் இனிமேல் வாங்கிய பரிசுப் பொருளை மாற்றப் போவதில்லை! நீங்கள்தான் மாற்றியாக வேண்டும்!" என்று கத்தினாள் கமலி.

மணிக்கு மிகவும் அவமானமாக இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான்.

நல்ல வேளை! ஒருவரும் இல்லை!

* * *

மறுநாள், வாத்தியாரின் பிறந்த நாள். மறுநாள் காலை கடைக்குப் போக முடியாது. ஆகையால், அன்றேதான் மணி கிளம்பியாக வேண்டும்! மணியோ எழு!

மணி, மீண்டும் அந்தத் 'தெரிந்த' கடைக்குக் கிளம்பினான். நூறு 'பிளீஸ்' போட்டபின்பு பேனா,

பென்சிலைக் கொடுத்துவிட்டு ஒரு தமிழகராதியை வாங்கிக்கொண்டு திரும்பினன்.

* * *

மறுநாள் தமிழாசிரியர் வகுப்புக்குள் நுழைந்தபோது, மேஜை மீது இரு பொட்டலங்கள் இருப்பதைக் கண்டு வியந்தார். பின்பு அவைகள் தம்பிறந்தநாள் பரிசுகள் என்பதை அறிந்ததும் மகிழ்ந்தார். முதலில் ஆசிரியர் மாணவிகளின் பொட்டலத்தைப் பிரித்தார். ..ஐயோ! அவர் அதிலிருந்து எடுத்தது, மாணவர்கள் கொடுத்திருப்பது போன்ற அதே அகராதி!

பெண்கள், மாணவர்களின் தவிப்பு நிலைமையைச் சற்றும் உணராமல் உவகையிலேயே பூரித்துப் போயிருந்தார்கள். ஆனல் மாணவர்களின் பொட்டலத்தைப் பிரித்ததும்.. அவர்கள் பட்ட பாடு!

ஆசிரியர் பேசினர்:

“உங்கள் அன்பிற்கு என் மனமார்ந்த நன்றி. ஆனல், இரண்டு பரிசுகளும் ஒரே மாதிரியாக இருப்பதால் எதாவது ஒன்று மாற்றப்படலாம் என்பது என் அபிப்பிராயம். ..உங்களுக்குள் போட்டி வேண்டாம்! காசைச் சுண்டிப் போட்டுப் பார்க்கலாம். தலைவிழுந்தால் பரிசை மாற்றி வரவேண்டிய பொறுப்பு பையன்களுடையது. மறு பக்கம் விழுந்தால் பெண்கள் மாற்றி வரட்டும்!”

காசு, அந்தரத்தில் பல வித்தைகளைச் செய்துவிட்டு, தலையைக் காட்டிக் கொண்டு கீழே படுத்தது.

மணி ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

“ஸார், இம்முறை 13 ரூபாய்களுக்குத் தக்கபடி நீங்கள் விரும்புவதையே கூறுங்கள். நாங்கள் எது வாங்கினலும் சரியாக இருப்பதில்லை” என்றுன் முகுந்தன்.

முதலில் ஆசிரியர் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும் ஒரு மின்சார முகக்ஷவரக் கருவியை வாங்கலாம் என்று சொன்னர்.

மாணவர்களிடையே ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று! “ஸார், இந்தக் குடுமிக் கிட்டு செய்த வேலை தான் ஸார், இது! நாங்கள் முதலில் அதைக் கொடுப்பதாகத்தான் இருந்தோம்!” என்று கூவினன் மணி.

“பதட்டமடையாதீர்கள்! அவன் கூறுவதும் உண்மையே. நான் ஒரு நாள், அதைச் சற்று உபயோகித்துப் பார்க்க இரவல் வாங்கியிருந்தேன்!”

“**வி**மலா! இதென்ன வேலை! பேனவும் பென்சிலும் அளிக்கப் போவதாகக் கூறிவிட்டு....”

“ஆமாண்டா, முகுந்தா! பரிசுப் பொருள் இன்னதென்பதை உன்னிடம் சொல்லிவிட்டதற்காக மற்றப் பெண்களெல்லாம் என்னைக் கடிந்து கொண்டனர்! கடைசி வரையில் இன்ன பொருள் என்பது பெண்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாதாம். ஆகையால் இப்பரிசை நானே மாற்ற வேண்டியிருந்தது.”

எப்படியோ புதுப் பரிசைக் கொண்டுவந்துவிட்டான் மணி.

அதை வாத்தியார் பெற்றுக் கொண்டபோது எல்லோரும் (பெண்கள்கூடத்தான்) கை தட்டியது, பள்ளியையே அதிரச்செய்தது.

நினைத்ததும் நடந்ததும்

ஸ்ரீநிவாஸ்

காட்சி 1.

[ரமாகாந்தன் தன் அறையில் கன்னத்தில் கை களை ஊன்றிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவன் நண்பன் சீதாராமன் வருகிறான்.]

சீதாராமன்: ரமாகாந்த்! எந்தக் கோட்டையைப் பிடிக்கத் தீவிர ஆலோசனை? 'கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே' என்பார்கள்.. அப்படி என்ன நேர்ந்துவிட்டதப்பா?

ரமாகாந்தன்: நீ என்னப்பா எரிகிற கொள்ளியில் எண்ணெயை ஊற்றுகிறாய்? இப்போது என் மனம் 'புயலினால் தாக்கப்படுகிற படகை'ப் போல ஒரு நிலையில்லாமல் தத்தளிக்கிறதப்பா!....

சீதா: இதோ, உன் கவலையைப் போக்க நான் முன்வருகிறேன். விஷயத்தை உடைத்துத்தான் சொல்லேன்..

ரமா: என் உயிர் நண்பனாகிய உன்னிடம் சொல்லாமல் நான் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? நீயாவது என் மனக் கவலையை ஒருவாறு போக்க முடிந்தாலும் முடியும்..

சீதா: தாராளமாகச் சொல்ல வேண்டியதைச் சிக்கிரம் சொல்.

ரமா: 'வான்மதி' என்ற பத்திரிகையைப் பற்றித் தெரியுமல்லவா?

சீதா: தெரியாமலென்ன? அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் உன்னுடைய கதைகளைப் புறமுதுகு காட்டி ஓடும்படி திருப்பி அனுப்பிவிட்டாரோ?

ரமா: மடத்தனமான ஊகம். அடுத்த இதழ் 'வான்மதி'யில் என் கதை வருகிறதடா!

சீதா: கஜினி முகம்மதுவைப் போல் தொடர்ந்து படையெடுத்துக் கடைசியில் வெற்றி கண்டு விட்டாயாக்கும்! முதலில் 'ஸ்வீட்' 'சப்ளை' பண்ணு. இன்னும் உன் கவலைக்குக் காரணம் தெரிவிக்கவேயில்லையே!

ரமா: கவனமாய்க் கேள்! 'வான்மதி'யில் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொண் டிருப்பது உனக்குத் தெரியுமல்லவா?

சீதா: ஆகா, தாராளமாய்த் தெரியும்!

ரமா: கழகத்தின் அங்கத்தினர்களிலிருந்து இஷ்டப்பட்டவர்களைப் 'பேனு நண்பர்கள்' பகுதியில் விலாசத்துடன் பிரசுரித்ததையும் நீ அறிவாயென்று நினைக்கிறேன்.

சீதா: நீகூட உன்னுடைய பெயரை 'ரமா' என்று சுருக்கி வைத்துக்கொண்டு கழகத்தில் சேர்ந்திருப்பதாக அன்று சொன்னாயே!

ரமா: ஆமாம், உண்மைதான்! இந்தப் பேனு நண்பர்களில் டெல்லியிலுள்ள 'நீலா' என்ற ஒருத்திக்குக் கடிதம் எழுத வேண்டுமென்ற ஆசையால்தான் என் பெயரைப் பெண்ணின் பெயரைப் போல் மாற்றிக்கொண்டேன்!

சீதா: ஓகோ, சரிதான். மேலே சொல்லு!..

ரமா: சென்ற இரண்டு மாதங்களாக நீலாவுக்கும் எனக்கும் கடிதப் போக்குவரத்து இருந்து வந்தது. நேற்றைத் தினம் நீலா எழுதிய கடிதம் ஒன்று வந்தது. இந்தா, இதைப் பார்!....

"அன்புள்ள ரமா,
'வான்மதி'யின் மூலம் நம்மிருவரிடையே 'அன்பு' எனும் ஊற்றுத் தோன்றி நம்மை 'நட்பு' எனும் நீரில் அமிழ்த்தியிருக்கிறது. ரமா! வெறும் கடிதத்தின் மூலம் சந்தித்துக் கொண்டிருந்த நாமிருவரும் நேரிலேயே சந்திக்கும் வாய்ப்பு ஏற்படப் போகிறதென்றால் நீ நம்பமாட்டாய்! நீ வசிக்கும் ஊரிலேயேதான் எங்கள் மாமாவும் இருக்கிறார். இவ்விடமிருந்து திங்களன்று புறப்பட்டு, புதன்கிழமை தினம் அவ்விடம் நிச்சயமாக வருவேன்! வந்ததும் முதல் காரியமாக உன்னை நேரில் கண்டு பேசினால்தான் என் மனம் நிம்மதியடையும். உன்னை என்றும் மறவாத தோழி—நீலா."

சீதா: சரிதான்! அவள் வந்ததும் உன்னைச் சந்திக்காமல் இருக்க மாட்டாள்! நீ ஓர் ஆண்பிள்ளை என்று தெரிந்ததும்—..

ரமா: அதுதானடா எனக்குக் கவலையாயிருக்கிறது! நீ ஏதாவது வழி சொல்லேன்.

சீதா: நீ பெண் வேஷம் போட்டுக்கொண்டு அவளை வரவேற்பதைத் தவிர வேறு வழியில்லை!

ரமா: சே, சே! 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அதைப் போல நீ உதவுவாயென்று நம்பினேனே!...

சீதா: கவலைப்படாதே! உன் அக்காவைக் கொஞ்சம் தாஜாப் பண்ணி நாளைக்கு நீலா வரும்போது அவளை ரமாவாக மாறச் சொல்லி...

ரமா: பேஷான ஐடியா! உனக்கு என் நன்றி.

சீதா: இனிமேல் உன் அக்காவின் காலில் விழுந்து அவளை வழிக்குக் கொண்டுவர வேண்டியதுதான் பாக்கி!..

ரமா: 'நீலா' டெல்லிக்குப் போகும் வரை என் அக்கா ரமாவாக மாற வேண்டியிருக்குமே!

சீதா: இதனால் உன் அக்காவுக்கு ஒன்றும் கஷ்டமில்லை. ஒரு நல்ல 'பிரண்ட்ஷிப்' கிடைப்பது அவள் அதிர்ஷ்டம்தானே?

ரமா: ஆமாம்! நீலாவின் நட்புக் கிடைத்தால் அவளுடன் பேசிப் பழகிப் பொழுதைக் கழிக்கச் சௌகரியமாயிருக்கும்!

சீதா: ஆக, இருவருக்கும் நன்மையேதான்! அந்த நீலாவினுடைய விலாசத்தைக் கொஞ்சம் காண்பி, பார்க்கலாம்!.. (நீலாவின் கடிதத்தை ரமாகாந்தன் காட்டியதும், சீதாராமனின் கண்கள் அகல விரிகின்றன. அவன் மெல்லத் தனக்குள் சிரித்துக் கொள்ளுகிறான்.)

ரமா: இந்த விலாசத்தில் என்ன விசேஷமிருக்கிறது, அப்பா?

சீதா: (சிரித்தவாறு) அது பரம ரகசியமாய் இருக்க வேண்டிய விஷயம்! பிற்பாடு நான் விளக்காமலேயே உனக்கு விளங்கிவிடும்... சரி, பிறகு சந்திப்போம்!

(சீதாராமன் போகிறான்.)



காட்சி 2

[ஹேமலதா கண்ணாடியின் முன்னால் நின்று தன்னை அலங்கரித்துக்கொண்டிருக்கிறாள். ரமாகாந்தன் வருகிறான்.]

ரமா: அக்கா! உன் அன்ன நடையே அலாதி அழகுதான்! அலைபோல் நெளிந்தோடும் சுருண்ட கேசங்கள்...மின்னலென மின்னும் கருவிழிகள்..

ஹேம: டேய், போதும். உன் கற்பனை வெள்ளத்திற்கு அணை போட்டு உன் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வை. சதா என்னைக்கரித்துக் கொட்டும் நீயா, என்னைப் பற்றிப் புகழ்ச் சொல் பாட ஆரம்பித்து விட்டாய்?

ரமா: அக்கா! இதற்கு முன் நான் செய்த பிழைகளைப் பொறுத் தருள வேண்டும். உன்னால் எனக்கு முக்கியமான காரியம் ஒன்று நிறைவேற வேண்டியதாயிருக்கிறது! தாயே, அருள் பாலிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்!..

ஹேம: அடே! எதிரி சரணாகதியடைந்ததற்கு இப்பொழுதல்லவா காரணம் புரிகிறது! ஹா..ஹா! நேற்றுகூட நான் சினிமாவுக்குப் போக முடியாமல் தடுத்துச் சதி செய்து கொக்கரித்த நீயா என்னுடைய உதவியை நாடுகிறாய்?

ரமா: அதுதான் சொல்லுகிறேனே. என்னைத் தயவு செய்து மன்னித்து விடு..மன்னித்து விடு. இனிமேல் உன் வம்புக்கே நான் நிச்சயமாக வருவதில்லை!

ஹேம: சரி, சரி! என் காலில் விழுந்து கெஞ்சும்படி என்ன நேர்ந்து விட்டது உனக்கு? சுற்றி வளைக்காமல் சொல்லு!..

ரமா: நான் உன்னிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான்! ..நாளைக்கு டில்லியிலிருந்து என் பேனா சிநேகிதி நீலா இதே ஊரிலிருக்கும் தன்னுடைய மாமாவின் வீட்டிற்கு வருகிறாளாம்! என்னைத் தேடிக்கொண்டு நம் வீட்டிற்கும் கட்டாயம் வருவாள்..நீதான் ரமாவாக நடித்து என்மானத்தைக் காப்பாற்றவேண்டும்!

ஹேம: (சிரித்தவாறே) இந்த விஷயத்தில் உனக்கு என்னால் உதவ முடியாது! கடிதத்தின் மூலம் பேசியதைப் போலவே நேரிலேயும் பேச வேண்டியதே!

ரமா: அக்கா! அப்படிச் சொல்லி விடக்கூடாது. 'ரமா' என்பது ஓர் ஆண் என்று தெரிந்துகொள்ளும்போது நீலா என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பாள்? இதை அவள் பத்திரிகாசிரியருக்குத்தெரிவித்தாளானால், எனக்குக் கதையுலகில் இப்பொழுது முளைத்து வரும் புகழுக்குப் பங்கம் வந்துவிடும்! கொஞ்சம் இந்த ஏழையின் மேல் கருணை..

ஹேம: 'பேனா நண்பர்களுள் பெண்களுக்கு ஆண்கள் கடிதம் எழுதக்கூடாது' என்ற விதியை மீறிவிட்டு இப்பொழுது திண்டாடுகிறாய்!..உன் பிரச்னையைத் தீர்க்க என்னால்தான் முடியும்! இனிமேலாவது என் அருமையைத் தெரிந்துகொண்டு என்னைக் கரிக்காமல் சுமுகமாகப் பழகத் தெரிந்து கொள்!..

ரமா: தாயே, தங்கள் சித்தம், என் பாக்கியம்!

ஹேம: ஏண்டா, அவள் இவ்வூரிலிருக்கும் வரையில் தினமும் அரட்டையடிக்க நம் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தால்?..

ரமா: வரட்டுமே! உனக்கும் ஒரு நல்ல 'பிரண்ட்' கிடைக்கிறாள். எனக்கு உதவி செய்த புண்ணியமும் உனக்குக் கிடைக்கிறது! நானும் இனிமேல் என்றென்றும் உனக்கு அடிமை!....

ஹேம: (பொங்கி வரும் சிரிப்பை அடக்கியவாறு) ரைட்டோ! உன் கோரிக்கையை நான் கண்டிப்பாக நிறைவேற்றுகிறேன்! போன வாரம் வாங்கிய 'ஸாடின்' துணியைச் சோளி தைக்கக் கொடுக்க வேண்டும்!... முதலில் அந்தத் தையற்கார சாயபுவைக் கையோடு கூட்டி வா!

ரமா: உத்தரவு.....

காட்சி 3

[மறுநாள் புதன்கிழமை மாலை மணி நான்கு. ரமாகந்தன் வாசலில் நின்று கொண்டிருக்கிறான். ஒரு பெண் முகத்தில் புன்னகை தவழ ரமாகாந்தனை நோக்கி வருகிறாள்.]

பெண்: ரமா என்கிற பெண் இந்த வீட்டில்தானே குடியிருக்கிறாள்?

ரமா: ஆமாம், ஆமாம்! இதே வீடுதான். அவளுடைய பேனா சிநேகிதி நீலா என்பவள் டில்லியிலிருந்து இந்த ஊரிலுள்ள தன் மாமா வீட்டிற்கு வரப்போவதாகவும் அவளைச் சந்திப்பதாகவும் கடிதம் எழுதியிருந்தாள்.. நீங்கள் தான் மிஸ். நீலாவோ?

பெண்: (சிரிப்புக் கலந்த குரலில்) ஆமாம், நானேதான் அந்த சாட்சாத் நீலா!..

ரமா: உள்ளே வாருங்கள்! (இரைந்து) அக்கா அக்கா! உன் பேனா சிநேகிதி!

(ரமாகாந்தன் வாசலுக்குப் போகிறான். நீலாவும் ஹேமலதாவும் ஒருவரைப் பார்த்து ஒருவர் திடுக்கிடுகிறார்கள்.)

ஹேம: ஹா.. நீயா நீலா? நீ என் பள்ளித்தோழி வைதேகி இல்லே? வைதேகி! என்னைத் தெரிகிறதா?

வைதேகி: தெரியாமல் என்ன? நீ என் ஆருயிர்த்தோழி ஹேமலதா அல்லவா? நீ இந்த ஊரில் இருப்பாயென்று நான் கனவிலும் கூட நினைத்ததில்லே! புனுவில் இருக்கும்போது இரண்டு வருஷங்களுக்கு முன் நாம் இருவரும் 'ஈருடல் ஓருயிராக'த் திகழ்ந்தவர்கள் தானே!

ஹேம: ஆமாம்! எங்கள் அப்பாவுக்குத் திடீரென்று மாற்றலாகி விட்டதால் உன்னிடம் சொல்லிக் கொண்டு போகக் கூட முடியாமல் போய் விட்டது! கடவுளாகப் பார்த்துத்தான் நம்மைச் சேர்த்து வைத்தார்! அது சரி, நீயா 'நீலா' என்று புனைபெயர் வைத்துக் கொண்டு 'வான்மதி' கழகத்தில் அங்கத்தினராகச் சேர்ந்திருக்கிறாய்?

வைதேகி: ஹேம்! நான் ஒன்றும் 'நீலா' என்று புனை பெயர் வைத்துக்கொள்ளவில்லை. என் தம்பி நீலமேகம்தான் வேண்டுமென்றே தன்னுடைய பெயரை 'நீலா' என்று பெண்ணின் பெய



ரைப்போல் சுருக்கி வைத்துக் கொண்டு 'வான்மதி' கழகத்தில் சேர்ந்திருக்கிறான். பேனா நண்பர்கள் வரிசையில் இவன் பெயரைப் பார்த்துவிட்டு நீ 'ரமா' என்ற பெயரில் என் தம்பிக்குக் கடிதம் எழுத ஆரம்பித்து விட்டாய்!

ஹேம: அதனால் நீ உன் தம்பிக்குப்பதிலாக 'நீலா'வாக மாற நேர்ந்தது, இல்லையா?

வைதேகி: உண்மைதான்! நீ ஏன் 'ரமா' என்று உன் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும்?

ஹேம: விஷயத்தைக் கேள்! 'நீலா'வுக்கு கடிதம் எழுத 'ரமா' என்று பெயரைச் சுருக்கி வைத்து கொண்டது, என் தம்பி ரமாகாந்தன்தான்!

வைதேகி: பெரிய வேடிக்கைதான்! ஆண்கள் இருவருமே தங்களுடைய பெயரில் மட்டும் பெண்களாக மாறிக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்!

(வெளியே சென்ற ரமாகாந்தன் வருகிறான்)

ஹேம: (ரமாகாந்தனைக் காட்டி) இவன்தான் மிஸ். ரமா!

(வைதேகியும் ஹேமலதாவும் சிரிக்கிறார்கள். ரமாகாந்தன் விழிக்கிறான்.)

ஹேம: ரமாகாந்த்! இவள் மிஸ். நீலா இல்லை. உன்னுடன் புனாவில் படித்துக்கொண்டிருந்தானே, நீலமேகம், அவனுடைய அக்கா வைதேகி இவள்! 'நீலா' என்பது நீலமேகம்தானும்!

ரமா: ஹா... அப்படியா விஷயம்? என் அருமை நண்பனுக்கா இவ்வளவு நாட்கள் கடிதம் எழுதி வந்திருக்கிறேன்? மீண்டும் அவனைக் கடிதம் மூலமாகக்கூடச் சந்திப்போமென்று நான் கனவு கூடக் காணவில்லையே!

ஹேம: இவர்களுடைய அப்பாவுக்கு இந்த ஊருக்கே மாற்றலாகி விட்டதாம்! முதலில் அக்காவும் தம்பியும் புறப்பட்டு வந்து விட்டார்கள!

ரமா: (துள்ளிக் குதித்து) பலே பலே! நான் ஒரு விதத்தில் 'நீலா'வுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டாலும், என்னுடைய பழைய நண்பனை மறுபடியும் காண நேர்வது என் பாக்கியமே! அக்கா, நீ உடனே புறப்பட்டால் நானும் என் நண்பன் நீலமேகத்தை இப்பொழுதே பார்த்து ஆனந்திக்க முடியுமல்லவா, புறப்படு, புறப்படு!

ஹேம: உன்னுடைய பேனா சிநேகித நட்பு என் ஆருயிர்த் தோழி வைதேகியை என்னிடம் கொண்டு வந்து சேர்த்தது! அதற்கு என் நன்றி, ரமாகாந்த்!

வைதேகி: ஹேம்! உன் தம்பி வேண்டுமானால் என் தம்பியை எங்கள் மாமாவின் வீட்டில் சந்திக்கட்டும், நாம் இங்கேயே பேசிக் கொண்டிருப்போம். அடுத்த தெருவில் 68-ஆம் நம்பர் வீட்டில்தான் என் மாமா குடியிருக்கிறார்.

ரமா: (திடுக்கிட்டு) அந்த வீடு என் நண்பன் சிதாராமனுடைய வீடு. அந்த வீட்டில் இரண்டு குடித்தனங்கள் ஒன்றுமில்லையே!

வைதேகி: சீதாராமன்தான் எங்கள் மாமாவின் பிள்ளை. நாங்கள் இவ்விடம் வருவதைத் தெரிவித்து அவனுக்குக் கடிதம்கூட எழுதியிருந்தோம்.

ரமா: ஹா! சீதாராமன் பேச்சு மூச்சே விடவில்லையே! எமப் பயல்தான்! (திரை)



மாம்பழக் கூடை

'பேனா'

ஒரு வீட்டில் குப்பன், சுப்பன், திம்மன் என்னும் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். ஒரு நாள் இரவில் அவர்கள் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டிருக்கும் போது, சுமையாள் ஒருவன் ஒரு கூடையைத் தூக்கிக்கொண்டு வந்தான். "உங்கள் மாமா உங்களுக்கு மாம்பழம் அனுப்பியிருக்கிறார். உங்கள் மூன்று பேரையும் சமமாகப் பங்கு போட்டு எடுத்துக் கொள்ளச் சொன்னார்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

'நாளைக் காலையில் பழங்களைப் பகிர்ந்து எடுத்துக் கொள்ளலாம்' என்று சகோதரர்கள் தீர்மானித்தார்கள்.

பாதி இரவில், குப்பன் விழித்துக் கொண்டான். தன்னுடைய மாம்பழத்தை முன்னால் எடுத்துக் கொள்வது நல்லது என்று நினைத்து மாம்பழங்களை எண்ணினான். மூன்றாம் வாய்பாட்டை ஒப்பித்தான். அந்த மாம்பழங்களில் ஒன்றை எறிந்து விட்டால், பாக்கியுள்ள மாம்பழங்களைச் சரியாக மூன்று பங்காக வைக்க முடியும் என்று கண்டான். உடனே ஒரு மாம்பழத்தை வெளியே எறிந்துவிட்டு, பாக்கியுள்ள மாம்பழங்களைச் சரியாக மூன்று பங்காக்கினான். தன்னுடைய பங்கை எடுத்துத் தன் பெட்டியில் வைத்துக்கொண்டான். மீதியுள்ள மாம்பழங்களைக் கூடையில் வைத்து மூடினான். தூங்கிப் போனான்.

சற்றுப் பொறுத்து, சுப்பன் விழித்துக்கொண்டான். அவனுக்கும் தன்னுடைய மாம்பழங்களை முன்னால் எடுத்துக் கொண்டால் நல்லது என்று தோன்றிற்று. எழுந்திருந்து, மாம்பழங்களை எண்ணினான். மூன்றாம் வாய்பாட்டை ஒப்பித்தான். அந்த மாம்பழங்களில் ஒன்றை எறிந்து

பாட்டி: தூங்கிண்டு இருக்கிறயாடி, கண்ணு?

குழந்தை: ஆமாம், பாட்டி!

—J. அருணகிரி.

விட்டால், பாக்கியுள்ள மாம்பழங்களைச் சரியாக மூன்று பங்காக வைக்க முடியும் என்று கண்டான். குப்பன் முன்னால் தன்னுடைய பங்கை எடுத்துக் கொண்டாய் விட்டது என்பது அவனுக்குத் தெரியாது. ஆதலால், அவன் ஒரு பழத்தை வெளியே எறிந்துவிட்டு, பாக்கியுள்ள மாம்பழங்களைச் சரியாக மூன்று பங்காக்கினான். தன்னுடைய பங்கை எடுத்துத் தன் பெட்டியில் வைத்துக்கொண்டான். மீதியுள்ள மாம்பழங்களைக் கூடையில் வைத்து மூடினான். தன் படுக்கைக்கு வந்து, படுத்து கொண்டு தூங்கினான்.



சற்றுப் பொறுத்து, திம்மன் விழித்துக் கொண்டான். அவனுக்கும் தன்னுடைய மாம்பழங்களை முன்னால் எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று. அவனும் எழுந்திருந்து மாம்பழங்களை எண்ணினான். அவனுக்கு மற்ற இருவரும் தங்கள் பங்குகளை எடுத்துக்கொண்டது தெரியாது. அதிலுள்ள ஒரு மாம்பழத்தை எறிந்தால்தான் மூன்றாம் வாய்பாட்டின்படி மாம்பழங்களை மூன்று பங்காக்க முடியும் என்று கண்டான். ஒன்றை வெளியே எறிந்துவிட்டு, பாக்கியுள்ள பழங்களை மூன்று பங்காக்கினான். தன்னுடைய பங்கைத் தன் பெட்டியில் வைத்து மூடினான். படுக்கையில் வந்து படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் கூடையில் ஆறு மாம்பழங்கள் இருந்தன.

அவர்களுடைய மாமா அனுப்பிய பழங்கள் எத்தனை? குப்பனும் சுப்பனும் எடுத்துக்கொண்ட பழங்கள் எத்தனை எத்தனை?

(விடை 26-ஆம் பக்கத்தில்)



பையன்: அப்பா, நான் மருந்தைக் குலுக்கிச் சாப்பிட மறந்துவிட்டு அப்படியே குடித்துவிட்டேனே, இப்போ என்ன செய்வது?

தாத்தா: அதற்கென்னடா இப்போ? இரண்டு குதி குதித்தால் மருந்து வயித்துக்குள்ளேயே குலுக்கிக் கொள்கிறது!

—வி. சரஸ்வதி, மயிலாப்பூர்.

ஏரிக்கரையில்

— ராஜன் —

துப்பறியும் நிபுணர் ஜயராஜ் தமது ஆபீஸ் அறையில் உட்கார்ந்து, ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய ஆபீஸ் கட்டிடத்தின் ஓரமாக, பளபளப்பான புதிய பெரிய கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து டிரைவர் தான் முதலில் இறங்கினான். அவன் அணிந்திருந்த மடிப்புக் கலையாத வெள்ளை உடையும், சார்ஜண்ட் தொப்பியும் அவன் ஒரு பெரிய பணக்காரரிடம் டிரைவராக இருக்கிறான் என்பதை எடுத்துக் காட்டின. அவன் கீழே இறங்கி, பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்த தன் எஜமான் இறங்குவதற்காகக் கதவைத் திறந்து விட்டுப் பயபக்தியுடன் நின்றான். விலையுயர்ந்த சூட்டும், பளபளக்கும் சிவப்பு நிற 'ஷூ'க்களும் அணிந்த இரண்டு கால்கள் முதலில் வெளியே தெரிந்தன. ஜயராஜ் எழுந்து வந்து ஜன்னல் ஓரமாக நின்றுகொண்டு பார்த்தார். காரிலிருந்து இறங்கியவருக்கு நாற்பது வயதுக்கு மேல் இருக்கும். ஆசாமி கொழுகொழுவென்று இருந்தார். தலை கொஞ்சம் வழுக்கையாக இருந்தது. தங்க பிரேம்போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். அவர் அணிந்திருந்த சூட், இந்தியாவிலேயே தலை சிறந்த தையற்காரனால் தைக்கப்பட்டது என்று சொல்லும்படி இருந்தது. அவர் இப்படி அப்படித் திரும்பிப் பார்க்கவில்லை. நேராக உள்ளே நுழைந்து, மாடிமேல் ஏறி, ஜயராஜின் அறைக்குள் நுழைந்தார்.

"ஹலோ! குட்மார்னிங்!" என்று வந்தவரை வரவேற்றார் ஜயராஜ்.

"குட்மார்னிங்" என்று சொல்லிவிட்டு, அவர் ஒரு சோபாவில் உட்கார்ந்தார். கோட்டுப் பையில் கையைவிட்டு, விஸிட்டிங் கார்டு ஒன்றை எடுத்து நீட்டினார்.

மேஜைக்கு அப்பால், சுழல் நாற்காலியில் உட்கார்ந்த ஜயராஜ் கையை நீட்டி விஸிட்டிங் கார்டை வாங்கிப் படித்தார். அதில், 'மோகன்தாஸ், மானேஜிங் டைரெக்டர், மினர்வா மில்ஸ், பம்பாய்' என்று இருந்தது.

"உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். பம்பாயில் ஐந்தாறு மில்களை நடத்துவதாகக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் இப்போது தான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்" என்றார் ஜயராஜ்.

"நானும் உங்களைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். இப்போது தான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்!"

"உங்களுக்கு என்னால் ஏதாவது உதவி செய்யமுடியுமா? சொல்லுங்கள், செய்கிறேன்" என்றார் ஜயராஜ்.

"இந்த டவுனுக்கு வடக்கே ஏரிகரையில் அமைந்திருக்கும் பெரிய பங்களாவை விலைக்கு வாங்கிவிட்டேன். ஒரு மாதமாக அங்கேதான் இருக்கிறேன். இந்தப் பக்கத்தில் பெரிய துணி மில் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று பிளான் போட்டிருக்கிறேன். அதற்காகத்தான் இங்கேயே தங்கிவிட்டேன்."

அவர் எதற்காக இதைச் சொல்கிறார் என்று ஜயராஜுக்குப் புரியவில்லை. அவர் பேசாமல் தலையை ஆட்டிக்கொண்டிருந்தார்.

"எனக்கு ஒரு பெண் இருக்கிறாள். அவள் பெயர் பத்மாசினி. அவளுக்கு நாளை பதினைந்காவது பிறந்த நாள் வருகிறது. அவளுடைய பிறந்த விழாவுக்கு ஒவ்வொரு வருஷமும் ஏகப்பட்ட செலவு செய்வது வழக்கம். இந்தத் தடவை, மற்ற வருஷங்களைவிட இன்னும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்கு நீங்கள் அவசியம் வர வேண்டும்" என்று சொல்லி, அழைப்பிதழ் அடங்கிய கவரை நீட்டினார் மோகன்தாஸ்.

"தாங்க்ஸ்" என்று கவரை வாங்கிக்கொண்டார் ஜயராஜ். பிறகு, மெல்லச் சிரித்துக்கொண்டே,"உங்கள் பெண்ணுக்கு நிறையப் பரிசுகள் வந்து விழும் என்று நினைக்கிறேன்!" என்றார்.

"ஆமாம்" என்றார் தாஸ்.

"பரிசுகள் ரொம்பவும் விலை உயர்ந்தவைகளாக இருக்கும் என்று நினைக்கிறேன்!"

"ஆமாம்."

"நீங்கள், உங்கள் பெண்ணுக்குக் கொடுக்கப் போகும் பரிசு, ரொம்ப ரொம்ப விலை உயர்ந்ததாக இருக்கும் என்று ஊகிக்கிறேன். அதாவது நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம் என்று மதிக்கத் தக்க விலை உயர்ந்த நெக்லஸாகவோ, சந்திரஹாரமாகவோ இருக்கும் என்பதில் சந்தேகமில்லை!"

"ஆமாம்" என்றார் மோகன்தாஸ் ஆச்சரியத்துடன்.

"இவைகளை யெல்லாம் யாராவது தட்டிக்கொண்டு போய் விடக் கூடாதே என்ற பயத்தில் தான் முன் ஜாக்கிரதையாக என்னையும் இந்த விழாவிற்கு வரும்படி அழைத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்! நான் அவசியம் வருகிறேன். பிறந்த தின விழா குதூகலமாக இருக்கவேண்டும் என்பதே என் ஆசை! அசம்பாவிதமாக ஒன்றும் நடக்கக் கூடாதே என்பதுதான் என் ஆசை!" என்றார் ஜயராஜ்.

"நான் நினைத்ததற்குமேல் நீங்கள் பெரிய பேர்வழியாக இருக்கிறீர்கள்! நாளை மாலை ஏழு மணிக்கு அவசியம் வரவேண்டும்!" என்று சொல்லிவிட்டு மோகன்தாஸ் எழுந்து ஜயராஜின் கையைக்

குலுக்கி விட்டு, ஸ்டைலாக வெளியே நடந்தார்.

* * *

மறு நாள் மாலை ஜயராஜ் காரை எடுத்துக்கொண்டு, ஏரி கரைப் பங்களாவை நோக்கிப் புறப்பட்டார். பாதித் தூரம் கூடப் போயிருக்க மாட்டார். படாரென்று சப்தம் வந்தது. ஜயராஜ் காரை நிறுத்திக் கீழே இறங்கிப் பார்த்தார். ஒரு சக்கரம் அமுங்கிப் போயிருந்தது. அவர் காரின் பின்னாலிருந்த கதவைத் திறந்து, புதிய சக்கரத்தை எடுத்தார். அமுங்கிப்போன சக்கரத்தைக் கழற்றிவிட்டுப் புதிய சக்கரத்தை மாட்டினார். அதற்குள் அரைமணி நேரம் ஆகிவிட்டது. ஆகையால் ஏழு மணிக்கு ஏரிகரைப் பங்களாவில் இருக்க வேண்டிய ஜயராஜ் ஏழரை மணிக்குத்தான் பங்களாவின் வெளியே காரை நிறுத்தினார். அங்கே நூற்றுக் கணக்கான கார்கள் நிறுத்தப் பட்டிருந்தன. அவைகளுடன் ஒரு போலீஸ் வானும் நிறுத்தப் பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் ஜயராஜ் மெல்ல விசில் அடித்தார். அவருக்கு விஷயம் புரிந்து விட்டது.

ஜயராஜ் உள்ளே நுழைந்தார். உள்ளே எல்லோரும் ஒரு மாதிரியாக உட்கார்ந்து குசுகுசுவென்றுமெல்லப் பேசிக் கொண்டிருந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் யாரோ ஒரு வாலிபனிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்.

பத்மாசினி வெல்வெட் சோபாவில் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய அழகிய கண்கள் இரண்டும் எதிரேயிருந்த மேஜையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. அவள் ஒரு மாதிரியாக இருந்தாள்.

ஜயராஜ் வந்ததைப் பார்த்த மோகன் தாஸ் உடனே ஓடி வந்து, "நீங்கள் லேட்டாக வராமலிருந்தால் இந்தத் திருட்டு நடந்திருக்காது!" என்றார்.

"வழியில் கார் சக்கரம் வெடித்து விட்டது. அதனால் தான் லேட். இங்கே என்ன நடந்தது?" என்று கேட்டார்.

இதற்குள் இன்ஸ்பெக்டரும் அவரைப் பார்த்துவிட்டு அங்கு ஓடி வந்தார். "நல்ல சமயத்தில் வந்தீர்கள், மிஸ்டர் ஜயராஜ்" என்றார் அவர்.

மோகன்தாஸ் சொன்னார்: "கால் மணி நேரத்திற்கு முன் திடீரென்று விளக்குகள் அணைந்து விட்டன. மெயின் சுவிச்சு வெளிப்பக்கம் இருக்கிறது. ஆகையால் யார் விளக்கை அணைத்தார்கள் என்று தெரியவில்லை. மெயின் சுவிச்சைத் தள்ளிவிட்டு,

பியூஸையும் அகற்றி விட்டார்கள். மறுபடியும் பியூஸைப் போட்டு விளக்கைப் போட ஐந்து நிமிஷம் ஆகிவிட்டது. அதற்குள் மேஜை மேல் இருந்த நெக்லஸ் பெட்டி மறைந்து விட்டது. அதுவும் நான் கொடுத்த நெக்லஸ். அதன் விலை ஐம்பதினாயிரம் ரூபாய்!''

''ஆனால் இங்கிருந்து ஒருவரும் வெளியே போகவில்லை. நெக்லஸைத் திருடியவன் அதைக் கடத்திப் போக வழியில்லை. எப்படி மறைந்து விட்டது என்றே தெரியவில்லை!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''வேறு ஏதாவது காணாமல் போய் விட்டதா?'' என்று கேட்டார் ஜயராஜ்.

''மற்றொரு பெட்டியும் காணாமல் போய்விட்டது. அதில் என்ன இருந்தது என்றே தெரியவில்லை. அதைப் பரிசாகக் கொடுத்த சிவராமன் என்னும் வாலிபன் அதைப் பத்மாசினியிடம் மட்டும் காட்டி விட்டு, பெட்டியை மூடி மேஜை மீது வைத்துவிட்டான். அதில் இருக்கும் வஸ்துவைக் கடைசியில் எல்லோருக்கும் காட்டிப் பிரமிக்க வைக்கப் போவதாகச் சொன்னான்'' என்றார் மோகன்தாஸ்.

''சிவராமன் யார்?''

''அவன் கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் பழக்கமானான். வேலை வேண்டும் என்று அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தான். நிறையப் படித்திருக்கிறான். ரொம்பவும் யோக்கியமானவனைப் போல இருக்கிறான்!''

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டுச் சொன்னார்: ''அவனிடம்தான் இப்போது பேசிக் கொண்டிருந்தேன். திருட்டைப் பற்றி ஒன்றும் பிடிபடவில்லை!''

ஜயராஜ் சட்டென்று திரும்பிப் பத்மாசினியிடம் சென்றார். அவள் அவரைப் பார்த்ததும் மரியாதையுடன் எழுந்து நின்றாள். ஜயராஜ் அவளுடைய தலையைத் தடவிக் கொடுத்துக்கொண்டே, ''விளக்குகள் அணைந்தபோது நீ எங்கேயிருந்தாய்?'' என்று கேட்டார்.

''இதே இடத்தில்தான் நின்றிருந்தேன். சிவராமன் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். விளக்குகள் அணைந்ததும் எதிரே யார் வந்தார்கள், யார் போனார்கள் என்று தெரியவில்லை!''

''சிவராமன் என்ன பரிசு கொண்டு வந்தான், தெரியுமா?''

''அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்ணை மூடிக்கொண்டு கையால் தடவிப் பார்த்துச் சொல்லச் சொன்னான், கையால் தடவிப் பார்த்ததில், கெட்டியாகவும் மிருதுவாகவும் ஏதோ இருந்தது. என்ன என்று ஊகம் செய்ய முடியவில்லை. கடைசியில் அதைக் காட்டுவதாகச் சொல்லி அந்தச் சிறு பெட்டியை மூடி மேஜைமேல் நெக்லஸுக்குப் பக்கத்தில் வைத்துவிட்டான். நெக்லஸுடன் அந்தப் பெட்டியும் போய்விட்டது!''

ஜயராஜ் அவளுடைய முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு, பால்கனியை நோக்கி நடந்தார். பால்கனியிலிருந்து இருபது அடி தூரத்தில் அந்தப் பெரிய ஏரி அழகாகக் காட்சியளித்தது. அவருக்குப் பின்னால் வந்த இன்ஸ்பெக்டர், ''விளக்குகள் அணைந்ததும், ஏரியில் ஏதோ டப்பென்று

சப்தம் வந்ததாக வேலைக்காரி ஒருத்தி சொல்கிறாள். நான் நம்பவில்லை. திருடியவன், நெக்லஸை ஏரியில் போட்டுப் பிரயோஜனம் என்ன? இந்த ஏரி முப்பது அடி ஆழத்திற்குமேல் இருக்கிறது. இதனுள் நெக்லஸைப் போட்டால், மறுபடியும் எடுக்கவே முடியாது!" என்றார்.

ஜயராஜ் சிறிது நேரம் யோசித்தார். பிறகு மோகன்தாஸைப் பார்த்து, "மன்னிக்கவேண்டும். இதுவரை நான் எவ்வளவோ கேஸ்களை ஊதித்தள்ளி விட்டிருக்கிறேன். இந்தக் கேஸில் ஒன்றுமே பிடிபடவில்லை. மூளை குழம்புகிறது. நாளைக்காலை எட்டு மணிக்கு வந்து, என்னால் முடிந்ததைச் செய்கிறேன்!" என்று உரக்கச் சொல்லிவிட்டு, அவருடைய பதிலுக்குக் காத்திராமல் வெளியே சென்று காரை 'ஸ்டார்ட்' செய்தார். கார் டவுனை நோக்கிப் பறந்தது.

டவுனுக்குச் சமீபத்தில் வந்ததும் காரை வளைத்துத் திருப்பி வேறு வழியாக ஏரிகரையை நோக்கிச் செலுத்தினார். ஏரியின் மற்றொரு கரையோரமாக மரங்களுக்கு மத்தியில் காரை நிறுத்திவிட்டு, சந்தடி செய்யாமல் கீழே இறங்கி வந்து பார்த்தார்.

மேகங்களுக்கு இடையே மறைந்திருந்த நிலா அப்போதுதான் பளிச்சென்று வெளியே தோன்றி, வெள்ளி நிலவைப் பொழிந்தது. ஜயராஜ் ஒரு மரத்தின் ஓரமாக நின்றுகொண்டு

கவனித்தார். தூரத்தில், பங்களாவின் விளக்குகள் ஒவ்வொன்றாக அணைந்தன. வெளியேயிருந்த கார்கள் எல்லாம் போய்விட்டன.

ஒரு மணி நேரம் கழிந்தது. எங்கும் நிசப்தம்.

ஏரிகரை ஓரமாக ஓர் உருவம் நகர்ந்து வந்து, ஓர் இடத்தில் நின்றது. ஜயராஜ் மெல்ல நகர்ந்து, அந்த உருவத்திற்குச் சமீபத்தில், மரத்தோடு மரமாக ஒட்டி நின்று கவனித்தார்.

அந்த உருவம் ஏரியில் நீர் மட்டத்தையே உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தது. ஒரு வஸ்து பளபளவென்று நீர் மட்டத்தில் வந்து நின்றது. அந்த உருவம் சட்டென்று நகர்ந்து, ஏரி ஓரமாகப் புதர்களின் மறைவில் கட்டியிருந்த படகில் நீர் மட்டத்தில் எழும்பி நின்ற அந்த வஸ்துவை எடுத்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு, அந்த உருவம் படகைத் திருப்பியது. மறுபடியும் படகைப் புதரில் ஒளித்துவிட்டு, ஏரிகரையில் காலை வைத்ததும் ஜயராஜ் கப்பென்று தாவி அந்த உருவத்தின் வலது கையைப் பிடித்து, "மிஸ்டர் சிவராமன்! உன்னைப் போல் படித்தவர்கள், தங்கள் மூளையைத் தீய வழியில் செலுத்துவதைவிட, நல்ல வழியில் செலுத்தினால் எவ்வளவோ நன்மையாக இருக்கும்" என்று சொல்லி, சிவராமனுடைய பாக்கெட்டில் கையை விட்டு, அந்த வஸ்துவை எடுத்தார்.

காணாமல்போன நெக்லஸ், ஒரு ரப்பர் பந்துடன் இணைக்கப்பட்டிருந்தது!

"இத்துடன் இணைக்கப்பட்டிருந்த கனமான சோப்புக்கட்டி தண்ணீரில் கரைந்து விட்டதும் ரப்பர் பந்து நெக்லஸை இழுத்துக் கொண்டு மேலே வந்துவிட்டது! நீ பத்மாசினிக்குக் கொண்டு வந்த பெட்டியில், கனமான சோப்புக் கட்டியும், ரப்பர் பந்தும் பிணைக்கப்பட்டிருந்தன. பத்மாசினியால் அவைகளைக் கண்ணை மூடிக் கொண்டு கண்டு பிடிக்க முடியவில்லை! உன்னுடைய கூட்டாளி விளக்கை அணைத்ததும், சட்டென்று நெக்லஸை எடுத்து ரப்பர் பந்துடன் பிணைத்துப் பால்கனிக்குச் சென்று, அவைகளை ஏரியில் போட்டுவிட்டு, மறுபடியும் விளக்கு வருவதற்குள் பத்மாசினியின் எதிரே வந்து நின்றுவிட்டாய்! இல்லையா?"

சிவராமன் பேசவில்லை.

"என்னுடைய ஊகம் எப்போதும் சரியாக இருக்கும்! உன்னைக் கையும் களவுமாகப் பிடிக்கவே நான் நாளைக் காலை வருவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டேன். ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிடு! உன்னுடைய கூட்டாளி யார்? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாவிட்டால், போலீஸ்காரர்கள் தீக்குச்சியைக் கிழித்து, கைவிரல் நகத்தின் சந்துகளில் நெருப்பைக் காட்டுவார்கள்! அப்போது அவ்வளவு சுகமாக இருக்காது!" என்றார் ஜயராஜ்.

மாம்பழக் கூடை விடை:

மாமா அனுப்பிய பழங்கள் 25
குப்பன் 8 பழங்கள்
சுப்பன் 7 பழங்கள்

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(G) 356. கோவிந்தராம் R., பம்பாய் 2. 357. கணபதி V. R., ஊஞ்சலூர். 358. கோவிந்தராஜன் V., ஒரத்தநாடு. 359. கிரிஜா N.K., கல்கத்தா-26. 360. கணேசன் V., தஞ்சாவூர். 361. கோபால் P., ராஜன் P., பெரிய நாயக்கன் பாளையம். 363. கோவிந்தராஜன் T. N., சென்னை 5. 364. குருராஜன் D. S., தர்மபுரி. 365. கோவிந்தன் S. P., வேம்பால். 366. கோபால்ரத்னம் R., தஞ்சவூர். 367. குருசாமி M., மதுரை. 368. கோபாலகிருஷ்ணன் H. R., அரவங்காடு. 369. கோபால் M. K., கோயமுத்தூர். 370. V. V., மதுரை. 371. கணபதி ராமலிங்கம் K., சோமசுந்தரம் K., நடராஜன், ரங்கம்மாள், மதுரை. 372. கணபதி D., களக்காடு. 373. கோபாலன் A., (விலாசம் இல்லை). 374. ஞானமணி C., சென்னை-21. 375. கோபாலன் S., சென்னை 1. 376. கோவிந்தசாமி B., ஐயனுவரம். 377.• கோவிந்தராஜன் C., திருநெல்வேலி டவுன். 378. கோபாலன் S., இக்களூர். 379. கோபாலன் T. K., திருப்பத்தூர். 380. குருசாமி P., சுந்தரபாண்டியம். 381. கோபால சர்மா K., காரைநகர். 382. கோபால் D., திருவண்ணமலை. 383. குருமூர்த்தி P., மல்லியம். 384. கணபதி N., பவானிபூர். 385. கணேசன் S., ஜாம்ஷட்பூர். 386. கணேசன் R., ஜாம்ஷட்பூர். 387. கோவிந்தன் L., T. வாடிப்பட்டி. 388. கணேசரத்தினம் S., பாயிண்ட் பீட்ரோ. 389. கணேசன் V., புஷ்பவனம். 390. ஜார்ஜ் B., சென்னை. 391. கோபாலகிருஷ்ணன் R., நாகப்பட்டினம். 392. கணேசன் S., T. வாடிப்பட்டி. 393 ஞானசாமி S., சொக்கநாதன், மண்டபம் காம்ப். 394. கோபால் S., பெரம்பலூர். 395. கோபாலகிருஷ்ணன் K. G., திருவள்ளூர். 396. கோபாலகிருஷ்ணன் V., பல்லடம். 397. கோவிந்தராஜன் S., புதுடில்லி. 398 கோமதி V. S., புதுடில்லி. 399. குண

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

ஆகஸ்டு, 1-'54 கூபன் செ:

சிலன் D. R., தர்மபுரி. 400. குருசாமி P., பாலப்பட்டி. 401. கோபாலகிருஷ்ணன் V. B., சென்னை 4. 402. கங்காதரன் K., திருவிடமருதூர். 403. கோமதிநாயகம் M., தென் காசி. 404. கௌரி சங்கர் S., டோமல்குடா. 405. கணபதி V., சென்னை 5. 406. கோபால் V. K., பம்பாய் 19. 407. கோபாலன் P., ஆடுதுறை. 408. குருசாமி A. P., தென்காசி.

H. 41. அநுமந்தராவ் K. G., சென்னை 5. 42. ஹமீது S. A. S., மாவநெல்லை. 43. ஹபிபுல்லா M., சின்னசேலம். 44. ஹென்றி காபிரியல்., வேப்பேரி, சென்னை 7. 45. ஹைதர் அலி., குருநாகல். 46. ஹரிஹரநாராயணன் C. P., சென்னை 17. 47. ஹரிஹரன் S., பங்களூர். 48. ஹாஜாமொஹிதீன் M. M., குருநாகல். 49. ஹேமலதா, ராமகிருஷ்ணன்., தெப்பக்குளம், திருச்சி. 50. ஹாசன் M. S. M., கொழும்பு. 51. ஹாஜாமொஹிதீன் K. S. A. S., பொதக்குடி. 52, ஹரி., அல்சூர், பங்களூர். 53. ஹரிஹரன் M. S., ஆலவாய். 54. ஹரிநாத் R., காங்கயம். 55. ஹரிஹரன் V. K., திருவனந்தபுரம். 56. ஹேமா V., தான்பாத். 57. ஹரி S. N., ஆரணி. 58. ஹமீத்ஹாசன், ராமநாதபுரம். 59. ஹுசைன் C. H., வேலூர். 60. ஹேமலதா M. G., சென்னை 5. 62. ஹேமமாலினி., பறங்கிப் பேட்டை 63. ஹமீது., நாகூர். 64. ஹரிஹரசுப்பிரமணியன்., திருவனந்தபுரம். 66. ஹாசன் S.M.A., அக்குரணை. 67. ஹநுமந்தராவ் V., தஞ்சாவூர். 68. ஹாதத்தன் R., திகிலி. 69. ஹரிபூஷணம் J., கருங்கல்பாளையம். 70. ஹரிதாஸ் K. V., சென்னை 23. 71. ஹரிசந்திரன் J. B., இலங்கை. 72. ஹரிஹரன் K., திருவனந்தபுரம். 73. ஹரிஹரன் P. A., பாளையனூர். 74. ஹரி K., பம்பாய். 75. சாகுல்ஹமீத் S. K. M., கொழும்பு. 76. ஹரிஹரசுப்ரமணியம் S., சென்னை 11. 77, ஹாஜாகமாலுதீன்., ஆதலையூர். 78. ஹரிஹரன் S., குலசேகரம். 79. ஹிதயதுல்லா D., ஆடுதுறை. 80. ஹரிராமவாசகம்., பாலூர்ச்சத்திரம். 81. ஹாஜாமொஹிதீன் K. A., பொதக்குடி.

★★★★★★★★★★★★★★★

கண்ணன்
கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

(மீதி அடுத்த இதழில்)

ஸ்ரீமான் சுதர்சனம்

டி. வி. ஆர்.

ஸ்ரீமான் சுதர்சனம் இருக்கிறாரே, அவர் என்ன ஆசாரம்! என்ன ஆசாரம்! விடியற்காலை நாலுமணிக்கெல்லாம் எழுந்து, ஆற்று நீரில் ஸ்நானம் செய்வார். நெற்றியில் அழகாகத் திருமண் இட்டுக்கொண்டு, ஸந்தியா வந்தனத்தைச் செய்த பின்பு வீடு திரும்புவார். கொட்டு மழை பெய்தாலும் ஆற்று நீரில் குளிக்கத் தவறவேமாட்டார். பின்புதான் சூரியோதயமாகும் என்றால் கேட்பானேன்! குறித்த காலங்களில் முறைப்படி செய்யவேண்டிய ஸந்தியா வந்தனங்களைத் தவறாது செய்து முடிப்பார். தமது வேஷ்டி துணி மணிகளைத் தாமே தோய்த்து உலர்த்திக்கொள்வார். எங்கேயாவது வெளியே சென்றால் ஓட்டலைக் கண்ணெடுத்துப்பார்க்கவேமாட்டார். ஒரு சோடா சாப்பிட்டால் சாப்பாடு ஜீரணமாகுமென்று நண்பர்கள் எவரேனும் சொன்னால், உடனே அவர் அவர்களிடம், "இந்தச் சுதர்சனம், எச்சில் சோடாவையா குடிப்பார்? அந்த அநியாயம் ஒருகாலும் நடக்காது" என்று எதிர்த்துப் பதிலளிப்பார்.

சுதர்சனத்துக்குத் தேவு என்ற பிள்ளை ஒருவன் இருந்தான். இவன் தன் தந்தையின் குணத்திற்கு நேர் விரோதமானவன். பூணூல் போட்டு மூன்று வருஷமாகிறது. இன்னும் ஸந்தியாவந்தனம் பண்ணத் தெரியாது. கிராப்புத் தலை. என்றைக்காவது வீட்டில் சிற்றுண்டி செய்யவில்லையானால், தேவுவை ஓட்டலில் கட்டாயம் பார்க்கலாம்; அதுவும் நெய் மசால் தோசையுடன். வெங்காயம் என்றால் எட்டுமைல் தூரம் விழுந்தடித்துக்கொண்டு ஓடுவார், ஸ்ரீமான் சுதர்சனம். ஆனால் அவர் வயிற்றில் பிறந்த பிள்ளையோ வெங்காயத்தைத் தன் நண்பர்களிடமெல்லாம், உயிர்விட்டுப் புகழ்வான். தம் மகன் தம் குணங்களுக்கு முற்றிலும் மாறியிருப்பதைக்

கண்ட சுதர்சனம் பெரிதும் மனம் கலங்கினார். எங்கேயாவது கண் காணாத தேசமாகப் போய்த் தொலைந்தால் போதும் என்றாகி விட்டது அவருக்கு.

ஒரு சமயம் ஸ்ரீமான் சுதர்சனம் ஒரு கடிதம் எழுதி, அதைக் கவருக்குள் போட்டு, தம் மகனிடம் தந்து, கவரை ஒட்டித் தபால் பெட்டியில் போடும்படி சொன்னார். தேவு உடனே அந்தக் கவரை வாங்கித் தன் நாக்கிலுள்ள எச்சிலினால் ஒட்டினான். இதனைப் பார்த்து விட்டார் சுதர்சனம். அவர் கோபம் எல்லையை மீறியது. அருகே யிருந்த கைத்தடியை எடுத்துத் தம் மகனை நன்றாக வெளுத்து வாங்கினார். தன் மகன் மீது அடி படாமலிருக்க, தேவுவின் தாயார் வந்து தடுத்தாள். அவளுக்கும் நான்கு அடிகள் வைத்தார் ஸ்ரீமான் சுதர்சனம். அடிகளை வாங்கிக்கொண்டு அவள் உள்ளே சென்று விட்டாள். அதன் பின்னர் அந்தக் கடிதத்தை அவர் தம் கையினால் தொடாமல், ஒரு விசிறியால் எடுத்துக் கொண்டு போய்த் தபால் பெட்டியில் போட்டு விட்டு வந்தார்.

கோடை விடுமுறைக்காகத் தேவு தனது மாமா ஊராகிய சென்னைக்கு வந்து சுமார் பதினைந்து நாட்களாகிவிட்டன. தன் தந்தை மீதுள்ள கோபத்தினால் அவன் தன் தந்தைக்குக் கடிதமே எழுதாததனால், அவன் தாயார் தேவுவின் க்ஷேமசமாசாரத்திற்குப் பதில் எழுதும்படி தேவுவிற்கு ஒரு கடிதம் எழுதினாள்.

அன்றொரு நாள் ஸ்ரீமான் சுதர்சனம் வீட்டிலிருந்தார். அவருடைய மனைவி அவருடன் பேசிக்கொண்டிருந்தாள். அந்தச் சமயம் அங்கே தபால்காரன் கையில் ஒரு கவருடன், "ஸார் போஸ்ட்!" என்றான்.

மிக்க ஆவலுடன் தேவுவின் தந்தை கடிதத்தை வாங்கினார். அதில் அனுப்பும் விலாசத்தைப் படித்தார். 'தேவு' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. வந்துவிட்டது கோபம். அந்த லெட்டரை அப்படியே தூக்கி எறிந்தார். இதனைக் கண்ட தபால்காரன், "ஐயா! கடிதத்தைப் பிரித்துப் படிக்கவில்லை. அதற்குள் ஏன் இவ்வளவு கோபம்?" என்றான். கீழே விழுந்த கடிதத்தை எடுக்கப் போனாள் அவர் மனைவி. உடனே அவர், "இப்போது நீ அந்தக் கவரைத் தொட்டால் நீயும் வீட்டை விட்டுப் போய்விடு" என்றார்.

விஷயங்களைப் புரிந்துகொண்ட தபால்காரன், "என்ன ஐயா! மகன் தபால் போட்டிருக்கிறான். இன்னும் கவரைப் பிரிச்சுப் பார்க்கவில்லை. அதற்குள் கோபம் பிரமாதமாக யிருக்கிறதே. நல்ல சமாசாரம் ஏதாவது இருக்குதா, படிங்க" என்றான். தபால்காரன் கூறியபடியே ஆனால் ஒரே பிடிவாதமாக, "எதற்காகப் படிக்க வேண்டும்! அந்தப் பயல் எந்த நல்ல சமாசாரத்தை எழுதினாலும் கடைசியில் கவரை எச்சிலைப் போட்டுதான் ஒட்டியிருப்பான். அதனால் நான் அந்தக் கவரை இனித் தொடமாட்டேன். மற்றப்படி அவன்மீது கோபமில்லை. வேண்டுமானால் தபால்காரரே, நீரே கவரைப் பிரித்துத் தாரும்" என்றார்! தபால்காரனுக்கு வேறு வேலை இல்லையா? தேவுவின் கடிதம் படிக்காமலே கிடந்தது.

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

சித்திரம்: ஸாமி

ஏன் அப்படிச் சொல்கிறாய்? எனக்குத் தாகம் பொறுக்க முடியவில்லையே!
என்னைக் காரணம் கேட்காதே!
பாலகன் பலவாறு கெஞ்சியும் தங்கப் பறவை எதுவும் கூற மறுக்கவே....
உன்னை நான் வெட்டி வீழ்த்தி விடுவேன்!
ஹா...ஹா...
ஆவது ஆகட்டும். நான் தண்ணீர் குடிக்கத்தான் போகிறேன்...
ஏ, மூடா! இந்தத் தண்ணீரைக் குடித்தால் நீ கல்லாகி விடுவாய்!
ஹா! ஐயோ!
என்ன ஆனாலும் தண்ணீரைக் குடிக்காதே!
தொடரும்.

அந்தக் காட்சிதான் எத்தனை புதுமையாக இருந்தது!

மைதான வட்டத்தைச் சுற்றிக் குழுமியிருந்த மக்கள் திரள் திறந்த வாய் திறந்தபடி வியப்பில் ஆழ்ந்திருந்தது. ஒரே அச்சில் வார்த்தெடுத்ததுபோலிருந்த அந்தக் கட்டிளங்காளைகளைக் கண்டு மனசைப் பறிகொடுக்காத உள்ளங்கள் இல்லை. திண்தோள்களும், அகன்ற மார்புகளும், வீங்கிப் புடைத்து நிற்கும் இரு ஜோடித் தொடைகளும், இரும்புத் தூணை நிகர்த்த கைகளும், பால் வடியும் முகங்களும் அனைவரையும். கவர்ந்து அசையவொட்டாமல் செய்தன. முதுகுப் புறத்தில் குஞ்சலத்தோடு தொங்கிய சிவப்புப்பட்டு அங்கிகள் கண்களைப் பறித்தன. இடையை இறுக்கியிருந்த கச்சின் பட்டைகள் அகன்ற மார்பையும், தோள்களையும் மேலும் விரிவடையச் செய்து காட்டின.

அவர்களையும் பார்த்துவிட்டு, பிடரியைச் சிலுப்பிக்கொண்டும் சிவந்த வாயைப்பிளந்துகொண்டும் கர்ஜித்த வண்ணம் நிற்கும் சிங்கத்தையும் பார்த்தால், பூரண சந்திரனையும் அதனை விழுங்கவரும் ராகுவையும் ஒருங்கே பார்ப்பதுபோலிருந்தது.

நெஞ்சு திடுக்கிடும் சிங்கத்தின் உறுமலை, அந்த இளங்காளைகள் இருவரும் லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை. இருவரும் ஒரு முறை வெகு லாகவமாக வட்ட மண்டபத்தைப் பார்த்து வணங்கிவிட்டு, வாளை இருகைகளாலும் வளைத்துப் பார்த்துக்கொண்டார்கள். காற்றைச் சீவுவதுபோல் 'வொய், வொய்' என்று ரீங்காரம் செய்யும்படி வீசிப்பார்த்துக்கொண்டார்கள்

ஒரு பெரிய விந்தையான போட்டியைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி கூட்டத்தினரிடையே நிலவியது. எத்தனையோ

அதிசயப் போட்டிகளைக் கண்டு களித்த சிம்மக்கோட்டை மக்களுக்கே இந்தப் போட்டி ஒருவித அச்சத்தைக் கொடுத்தது என்றால் இதற்குமேல் எதுவும் விவரிக்க வேண்டியதில்லை.

சிம்மராஜா கம்பீரமான ஆசனத்திலிருந்து எழுந்தார். ஒரே கரகோஷமும் அவரோடு எழுந்தது. கையை அமர்த்தியதும் அவர் கையோடு ஆரவாரமும் அடங்கியது. கட்டியக்காரர்கள் அவர் பேசுவதை அங்கங்கே திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

“போட்டியிட்டுப் போர் புரிய நிற்கும் இளவல்களே! அதைக் காணத் திரண்டிருக்கும் நகரமக்களே! அனைவருக்கும் என் வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறேன். இதோ வாள்போர் ஆரம்பமாகப் போகிறது. ஒருபுறம் உறுமி நிற்கும் சிம்மம்; மறுபுறம் வாள் ஏந்தி நிற்கும் சகோதரன். சிங்கத்தையும் சகோதரனையும் ஒரே சமயத்தில் சமாளித்து வெற்றிபெறவேண்டும்.

“வாள் போருக்குச் சில தர்மங்கள் உண்டு அந்தத் தர்மத்துக்கு இணங்க, இவர்கள் இருவரும் போர் புரிந்து தம் வல்லமையைக் காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

“வெற்றி என்பது ஒருவருடைய உரிமைப் பொருள் அல்ல. வெற்றித் தேவதை மாபெரும் மாயக்காரி. இளைத்தவன் சளைத்தவன் என்று பார்க்கமாட்டாள். எவனோ ஒருவனுடைய பங்கில் நின்று ஜயமாலையை அவன் கழுத்தில் அணிவித்துவிடுவாள். ஆகவே இந்தப்போரின் வெற்றி தோல்வியை அந்த மாயக்காரியின் முடிவுக்கே விட்டு விட்டு, நாம் இந்தப் போட்டியைக் கவனிப்போம். வெற்றியடைபவரை நாமும் வாழ்த்துவோம். தோல்வியடைந்தாலும் நாம் அவர்களைப் பாராட்டுவோம், வெற்றியும் தோல்வியும் நம் விருப்பத்தில் இல்லாத காரணத்தால்!

“மூன்று முறை அதாவது மூன்று நாழிகை நேரம் இந்தப் போர் நடைபெறும். பத்து முறை எண்ணியும் எழுந்திராதவர் தோல்வியுற்றவராக

எண்ணப்படுவார். மற்ற நிபந்தனைகள் எல்லா வாட்போர்களுக்கும் உள்ளவை போன்றதே. இனி, போர் ஆரம்பமாகலாம்!''

இவ்வாறு அவர் கூறிமுடித்ததும் பறை முழங்கியது. 'ஜண், ஜண்' என்ற ஜங்காரத்துடன் வாட்கள் இரண்டும் சேர்ந்து குறுக்காக ஒரு முறை உரசிக்கொண்டன.

"ணங்!" என்று இரண்டும் ஒரு ஒரு முறை மோதின. அதன் பிறகு, மின்னல் நெளிவதுபோல் வளைந்த வாட்களிரண்டும் 'ணங், ணங், ணங்'கென்று இடைவிடாமல் ஒலிக்கத் தொடங்கின. சிங்கமோ குட்டிபோட்ட பூனைபோல ஓரிடத்தில் நில்லாமல் அவர்களை நெருங்கவும் நெருங்காமல் சுற்றிச் சுற்றி வந்தது. எந்தச் சமயத்தில் என்ன நேருமோ என்று அனைவருக்கும் கதி கலக்கமாக இருந்தது.

வாள் போரின் உக்கிரம் நெருப்புப் பொறி பறப்பதுபோல் இருந்தது. இமை தப்பினால் உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடும். வயிற்றை நோக்கிப் பாய்ந்து வரும் வாள்முனையை மற்றொரு வாள் தடுத்து எதிரியின் வயிற்றைக் குறிபார்த்துப் பாயும். வாள்வீச்சுக்கு இசைய, பார்க்க முடியாமல் கண்கள் சளைத்துக் களைத்துப் போயின. பல நுணுக்கமான வீச்சுகளையும், அதைத் தடுத்த சாமர்த்தியத்தையும் பார்க்க முடியாமலே போய்விட்டன. அந்த இளைஞர்கள் பெருமூச்சு விட்டார்களோ என்னவோ சபையினர் 'ஆங், ஊங் - அப்படி - இப்படி' என்று வளைந்து நெளிந்து பக்கத்திலிருப்பவர்களை மறந்து, அவர்கள்மீது மோதிக்கொண்டார்கள். ஒவ்வொருவருக்கும் தாமே சண்டை போடுவதுபோல ஒரு பிரமை! ஓர் ஆயாசம்!

பார்த்துக்கொண்டேயிருந்தபோது சிங்கம் திடீரென்று அமலன் மீது பாய்ந்தது. அதே சமயம் விமலனும் அவன் மீது பாய்ந்தான். புத்தி நுட்பத்துடன் போரிட்டு வந்த அமலன் தொலைந்தான் என்றே எண்ண வேண்டியிருந்

தது. ஆனால் சிம்ம ராஜாவின் அநுபவ வாக்கு, பொய்யாகுமா? தொலைந்தான் என்று எண்ணிய அமலன் மிகச் சாதுரியமாக ஓர் அடி பின் வாங்கிக் குனிந்து கொண்டான். சிங்கம் விமலனின் கத்தியில் ரத்தக் காயம் பட்டுக் கொண்டு எதிரில் போய் விழுந்தது. விமலனுடைய கவனம் திரும்புவதற்குள் அவனுடைய வாளை அமலனுடைய வாள் தட்டித் தூக்கி எறிந்துவிட்டது. அடுத்த கணம் அவன் மார்பின் மீது நகர வொட்டாதபடி வாள் முனையை வைத்துக்கொண்டான் அமலன். மத்தியஸ்தர் ஒருவர் உடனே மன்றத்தில் எழுந்து நின்று, "ஒன்று, இரண்டு, மூன்று" என்று எண்களை விட்டு விட்டுக் கூறி வந்தார். விமலன் எவ்வளவோ முயன்றும் நகர முடியாதபடி நின்றான். கொஞ்சம் அசைந்திருந்தால் கூரியவாள் மார்பில் பாய்ந்திருக்கும்! வாளை எடுக்க முடியாமல் பத்து எண்ணும்போது தோற்றுப் போனான்.

சற்றுப்பொறுத்து இரண்டாவது முறை மீண்டும் போர் தொடங்கியது. இந்தத் தடவை சிங்கத்தின் உபத்திரவம் மிகவும் அதிகமாய் இருந்தது. அது வெகு அருகில் நின்று இருவரையுமே அச்சுறுத்திக்கொண்டிருந்தது. விமலன் இப்போது நூறு பங்குப் பலம் பெற்றவன்போல் வீறு கொண்டு விளங்கினான். கத்தி வீசுவதே தெரியாத வேகத்தில், தலை கிறங்கிப் போகும்படியாக ஆவேசத்துடன் வீசினான். கத்தியின் சத்தம்தான் 'விங் விங்' கென்று சிறியதே தவிர எங்கே எப்படிச் சுழல்கிறது என்று தெரியவில்லை. காயமடைந்த சிங்கமோ கோபக்கனல் ஜொலிக்க அவர்களிடையே பாய்ந்து பாய்ந்து வந்தது. முக்கால் நாழிகை வரையில் யார் மிஞ்சுவார்கள் என்று தெரியவில்லை.

"கிணிங்— சர்ர்ர்—" என்று சத்தம் எழுந்தது.

"ஆ!" என்று அடுத்த கணம் மரம் சாய்வதுபோல அமலன் கீழே விழுந்தான்.

'ஒன்று, இரண்டு, மூன்று.. பத்து!'

அமலன் எழுந்திருக்கவேயில்லை.

மூன்றும் முறை, போர் துவங்கும் முரசொலி எழுந்தது.

அப்போதும் அமலன் எழுந்திருக்கவில்லை. விமலன் கையும் காலும் துடி துடிக்க எதிரே நின்றான். வெகு நேரமாகத் தரையில் கிடந்த அமலனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த சிங்கம், மெல்ல அவனை நெருங்கியது. அமலனுக்குத் தொடையில் சரியானபடி வாள் வெட்டுக்காயம். மெல்லச் சிங்கம் அருகில் நெருங்குவதை விமலன் வேண்டுமென்றே பார்த்துக்கொண்டிருந்தான். 'அமலன் தொலைந்தான்!' என்று கூக்குரல் எங்கும் கேட்டது.

தொலைந்துதான் போயிருப்பான்! ஆனால், நல்ல காலம், அமலன் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தான். எங்கிருந்துதான் தெம்பு வந்ததோ, தெரியவில்லை. விண்ணென்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அவனுடைய கூரிய வாள் சிங்கத்தின் அகன்ற வாயைக் ஒரு குத்துக் குத்திக் கிழித்தது. அண்டமே அதிரும் கோர கர்ஜனையுடன் சிங்கம் புரண்டு விழுந்தது.

(தொடரும்)

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

ஆர். கிருஷ்ணமூர்த்தி, கள்ளக் குறிச்சி.

(i) உலகத்திலேயே பெரிய பாலம் எது?

(ii) உலகத்திலேயே பெரிய சிலை எது? அதன் உயரம் என்ன?

(iii) உலகத்திலேயே பெரிய தெரு எது?

சான் பிரான்சிஸ்கோவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ—ஒக்லண்டு பாலமே உலகில் மிக நீளமான பாலம். இதன் மொத்த நீளம் $8\frac{1}{4}$ மைல். இதில் $4\frac{1}{2}$ மைல் மிகவும் ஆழமான நீரைக் கடக்கிறது.

இந்தப் பாலம் இரண்டு தட்டாக அமைந்திருக்கிறது. மேல் தட்டில் ஆறு வரிசையாக மோட்டார்கள் செல்லும்படியும், கீழ்த் தட்டில் மூன்று வரிசை லாரிகளும் இரண்டு வரிசை டிராம் வண்டிகளும் ஓடும்படியும் இந்தப் பாலம் போடப்பட்டிருக்கிறது.

உலகில் மிகவும் பெரிய சிலை அமெரிக்காவில் பெட்லோ தீவில் உள்ள சுதந்தர தேவியின் சிலை. தேவியின் உயரம் 150 அடி. அவள் நிற்கும் பீடத்தின் உயரம் 177 அடி. அவளுடைய தலைக்கு உள்ளே இருபது ஆட்கள் நிற்க முடியும்.

உலகத்தில் மிகப் பெரிய தெரு எது என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் யாராவது சொன்னால் வந்தனத்தோடு தெரிந்து கொள்ளுகிறேன்.

கே. விசுவநாதன், திருச்சி.

உலகத்திலேயே மிகப் பெரிய நீர்வீழ்ச்சி எது?

'பெரிய' என்பது பல பொருள்களை உடைய சொல்.

உலகத்தில் உயரத்தில் பெரிய—அதாவது மிக உயரமான— நீர் வீழ்ச்சி தென் அமெரிக்காவில் வெனெசுவேலா நாட்டில் உள்ளது. அதன் உயரம் சுமார் ஒரு மைல்.

இவைகளைத் தவிர நையாகரா நீர்வீழ்ச்சியும் அதை அடுத்துள்ள 'குதிரைலாட' நீர்வீழ்ச்சியும் மிகப் பெரியவை என்று புகழ் பெற்றவை.

வீ. கோபாலன், குன்றக்குடி.

மாடு நாய் போன்ற பிராணிகளுக்கு ஐந்தறிவு என்கிறார்களே, அவ்வைந்தறிவுகள் எவை?

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளைப் பஞ்சேந்திரியங்கள் என்று சொல்வதுண்டு. பஞ்சேந்திரியங்களின் மூலமாகச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து வகையான உணர்ச்சிகள் பெறப்படுகின்றன. இவைகளையே ஐம்புலன்கள் என்று சொல்லுகிறார்கள். ஐம்புலன்களின் வழியாக அறிவடையும் உயிர்களுக்கு ஐயறிவுயிர் என்றும், ஐந்தறிவுயிர் என்றும் பெயர். தமிழ் மரபுப்படி இச் சொல் கீழ்த்தரப் பிராணிகளையும், அறிவில் குறைவுடைய மனிதரையும் குறிக்கும்.

எம். கோதண்டபாணி, காட்சிலா.

பிளாஸ்டிக் என்றால் என்ன? அது எதிலிருந்து உண்டாகிறது?

பிளாஸ்டிக் என்பது ஒருவகை ரசாயனப் பொருள். அது பெரும்பாலும் பாலிமெர்களால் அமைந்தது. பாலிமெர் என்பது சில கூட்டுப்பொருள்களின் பல மூலக்கூறுகளின் இணைப்பால் அமைந்த விசித்திரப் பொருள். விளங்குகிறதா? இதைப் பற்றி விரிவான கட்டுரை ஒன்று எழுதினால், அப்போது ஒருவேளை இதைவிடச் சற்று அதிகமாக விளங்கலாம். நீ பெரியவனானால் தெரிந்துகொள்ள முடியும்.

பிளாஸ்டிக்கில் இரண்டு முக்கியமான பிரிவுகள் உண்டு. ஒன்றை வெப்ப-நெகிழ் பிளாஸ்டிக் என்றும், மற்றொன்றை வெப்ப-இறுகு பிளாஸ்டிக் என்றும் சொல்லலாம். கடிகாரத்தட்டு முதலியவை முதல் வகையைச் சேர்ந்தவை. மின்சார ஸ்விச்சு முதலியவை இரண்டாம் வகையைச் சேர்ந்தவை.

வி. எஸ். ரகுநாதன்,
பிரம்பாடி, கோகுவில்.

நமக்குச் சமீபத்தில் உள்ள நக்ஷத்திரம் எது? எவ்வளவு தூரம்?

வானத்தின் தெற்குப் பகுதியிலே நரக்குதிரை (சென்டாரஸ்) என்னும் நக்ஷத்திர கணம் ஒன்று இருக்கிறது. அதில் உள்ள மிகப் பிரகாசமான நக்ஷத்திரம் நம்முடைய நாட்டு முறைப்படி திரிசங்கு என்னும் நக்ஷத்திர கணத்தில் அடங்கியிருக்கிறது. அந்த நக்ஷத்திரம் உண்மையில் மூன்று நக்ஷத்திரங்கள் சேர்ந்த ஒரு சிறு குடும்பம். அதில் மிகச் சிறிய நக்ஷத்திரம் அதிலுள்ள மிகப்பெரிய நக்ஷத்திரத்தை மூன்று லக்ஷம் வருஷத்தில் சுற்றிவருகிறது.

இந்தச் சிறிய நக்ஷத்திரமே நம்மிடமிருந்து மிகச் சமீபத்தில் உள்ள நக்ஷத்திரம். அது நம்மிடமிருந்து சுமார் நாலேகால் ஒளி வருஷ தூரத்தில் இருக்கிறது. ஒளி வருஷம் என்பது சுமார் 6,000,000,000,000 மைல்—அதாவது ஆறுலக்ஷ கோடி மைல். ஆகவே, நமக்கு மிகவும் அருகில் உள்ள நக்ஷத்திரம் நம்மிடமிருந்து சுமார் இருபத்தைந்தரை லக்ஷ கோடிமைல் தூரத்தில் இருக்கிறது.

ஹிட்லரால் விஞ்ஞானிகள் சங்கத்திலிருந்து விலக்கப்பட்ட ஆல்போர்டு ஈன்ஸ்டின் உயிரோடு இருக்கிறாரா? அவர் வயது என்ன?

அவருடைய பெயர் ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன் (Albert Einstein) என்பது. அவர் உயிரோடு இருக்கிறார். அவர் 1879-ம் வருஷத்தில் பிறந்தார். ஆகையால் அவருக்கு வயது இப்பொழுது எழுபத்தைந்து.

என். ஆதியப்பன்,
வேலாயுதப்பட்டணம்.

உலகத்திலுள்ள புத்தகசாலைகளில் மிகப் பெரியது எது? அது எங்குள்ளது?

பாரிஸ் நகரத்திலுள்ள பிப்லியோதிக் நாஷனேல் என்னும் புத்தகசாலையே, உலகத்திலுள்ள புத்தகசாலைகள் எல்லாவற்றிலும் அதிகப் புத்தகங்களைக் கொண்டதாக இருந்தது. இப்போது உள்ள நிலை எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. வாஷிங்டனில் உள்ள புத்தகசாலையே மிகப் பெரிது என்று ஓர் அமெரிக்கர் சொன்னார்.

எங்கள் பகுதி

* 'கண்ணன் தந்த காட்சி'

ஜூலை மாதம் 1-ஆம் தேதி 'என்வீடு' தியேட்டரில் 'கண்ணன்' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தான். என்கை, அதுதான் மிஷின், படத்தை ஓட்ட ஆரம்பித்தது!

"சர்..ர்..!" அந்த வீதியில் அருமையான சைக்கிள் ஒன்று போய்க் கொண்டிருந்தது! அதிலே அண்ணனும் தங்கையும் சைக்கிளில் ஏறி, போலீஸ் சேவகனைப் பொருட்படுத்தாமல் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர்!

"டர்..ர்" படம் நகர்ந்தது. "கேட்டீர்களா!" என்ற கொட்டை எழுத்தின் கீழ் ஐந்து பொன்னான விஷயங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அதன்பின், "அம்மா, தபால்!" என்ற காமிக் காட்சியை நான் ரஸித்துக் கொண்டிருந்த போது இத்தனை நாளாக எதிர்நோக்கி இருந்த 'ஆர்வி'யின் "லீடர் மணி" திரையில் பிரவேசித்தான்! அவனது குணங்கள், பிறந்த இடத்தின் சிறப்பு, ஆற்றங்கரை, அவன் குறும்புச் செயல்கள், இவற்றை யெல்லாம் அப்படியே படம் பிடித்திருக்கிறார் மிஸ்டர் 'ஆர்வி'. மறுபடி படம் சென்றது. திரையிலே, "ஐம்பது ரோஜாப் பூக்கள்" என்ற அழகான கதையை உருவாக்கி ஆனந்தமூட்டுகிறார் தங்கமணி.

அடுத்த காட்சி, "பேராசிரியர் விஞ்ஞானம்" கேள்விகளுக்கு விடை அளித்துக்கொண்டிருந்தார்! 'பளிச்'சென்று மின்னல்! திரையில் ரமணியின்கேஸ் ஆரம்பமாயிற்று! ராஜன் தன் கதைக்குப் புது மெருகு கொடுத்திருக்கிறார். திடீரென்று ஒரு பேரிடி! "சியாங்-கியாங்" என்ற சப்தம்! அது சினர்களுடைய தீஞ்சுவைக் கதை.

திரையிலே ஒரே இருள்! ஆம்!.. அந்த 'நள்ளிரவிலே நடந்தது' என்ன? அக்காட்சியை அழகாக எடுத்திருக்கிறார் கலாசாமி. 'பளிச்'சென்று வெளிச்சம்! திரையிலே ஒரு 'குளோப்' சுற்றியது. அதிலே, "என்ன உலகம்?" என்ற கேள்வியோடு, தற்போது உலகில் நடக்கும் நிகழ்ச்சியை வைத்து படம் எடுத்திருக்கிறார் கிரிஜா.

பிறகு 'ஜனு'வின் சந்திரகிரிக் கோட்டையும், 'ஆர்வி'யின் சித்திரக் கதையான 'தூங்கும் அழகி'யும் ஷூட்டிங்செய்யப்படும் காட்சிகள் காட்டப்பட்டன. அதற்குப்பின் "எங்கள் பகுதி" ஆரம்பமாகியது.

---

*பரிசு பெற்ற கடிதம்

அதிலே பல விமரிசனங்கள். ஆகா! வெகு பிரமாதம்! கடைசியில்.... சோதரி தேவகியும், சோதரர் வைத்தியநாதனும் எழுதிக் கொடுத்த பாடல்கள் பாட, பின்னனி கீதங்கள் முழக்க 'சுபம்' என்ற எழுத்து மனத் திரையிலே மின்னியது!

[பின்குறிப்பு:- இவ்வாறு அழகும் அறிவும் நிரம்பிய, ஐந்து வயது நிரம்பாப் பாலகனுகிய கண்ணன் தந்தகாட்சி கருத்து நிறைந்தது. களிப்பூட்டுவது; அவன் நிறைந்த ஆயுளுடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.]

—RM. C. பூரணம், பள்ளத்தூர்.

தேனருவி

கண்ணனின் அட்டைப் படம் கண்களுக்கு மட்டுமல்ல, கருத்துக்கும் விருந்தளிக்கிறது.

'அம்மா, தபால்!' என்ற துணுக்கு பலே ஜோர்!

1-6-54 இதழில் மீனுபாய் "கிராமம் ஒன்றை நிலைக்களமாக வைத்துச் சிறு நாவல் ஒன்று எழுதக் கேட்டுக் கொள்கிறேன்" என்று ஆசிரியரைக் கேட்டிருக்கிறார். லீடர் மணி அந்த அவாவைப் பூர்த்தி செய்கிறது.

'ஐம்பது ரோஜாப்பூக்கள்' என்ற கதை தன் வேலையைப் பிறரிடம் செய்யச் சொன்னல் அது ஒழுங்காய் நிறைவேருது என்பதைக் காட்டுகிறது. ஏசு மகானின் பொன்மொழியையும் கூடவே கதையில் சேர்த்திருப்பது பாராட்டத் தக்கது.

இது போன்ற மகான்களின் பொன்மொழிகளைக் கதைகளில் அவசியமான இடத்தில் எழுதி வந்ததால் கதையைப் படிக்கும் சிறுவர்களாகிய எங்கள் மனத்தில் அவைகள் நன்ருய்ப் படிந்துவிடும்.

'கேளுங்கள் சொல்கிறேன்!' பகுதி மிகவும் பயனுள்ளதே!

'ரமணியின் கேஸ்' நல்ல கதை!

'மதிப்புள்ள பொருள்' ஓர் அருமையான கதை. 'நள்ளிரவில் நடந்தது' என்னும் கதையில் வரும் வைத்தியரைப் பார்த்தால் சிரிப்பு வருகிறது. அவருடைய அன்றைய 'ராசிபலன்' அப்படி இருக்கிறது.

'என்ன உலகம்?' என்னும் கதையில் நடமாடுபவர்கள் நம் முன்னேயும் நடமாடுகிருர்கள். சந்திரகிரிக்கோட்டை மிகவும் விறுவிறுப்போடு செல்கிறது.

துளிநீர் அருவி ஆவதுபோல் பல நல்ல கதைகள் சேர்ந்து கண்ணனைத் தேனருவி ஆக்குகிறது!

—P.S.பாரூக், அதிராம்பட்டணம்.

பாராட்டக்கூடிய முறையில் கடிதம் எழுதியிருப்பவர்கள்:

(1) எம். பீ. எம் மாஹிர், கொழும்பு-12. (2) செ. ர. வஸந்தன், திருச்சிராப்பள்ளி. (3) எம். ரங்கராஜு, நாமக்கல். (4) கே. சீனிவாசன், பழைய மாம்பலம். (5) பி. எல். நாராயணன், புதுடில்லி. (6) N. சசிரேகா, முசிரி. (7) கோ. கேசவன், செங்கல்பட்டு. (8) உடுமலை சுப்பு, உடுமலைப் பேட்டை. (9) டி. கே. கமலக்கண்ணன், சென்னை-3. (10) டி. ராஜேஸ்வரி, சிந்தாதிரிப்பேட்டை. (11) பி. எ. முகம்மது யாஸீன், சென்னை-14. (12) கா. மீனுக்ஷி சுந்தரம், கல்லல். (13) பி. வி. குமார், காந்திபுரம், கோவை. (14) வி. கல்பகம், மயிலாப்பூர். (15) ரா. சுந்தரமூர்த்தி, தஞ்சாவூர். (16) கே. பத்மநாபன், தஞ்சாவூர்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

கோனேரிராஜபுரம்

உபதலைவர்: கே. என். மகாலிங்கம்
பொருளாளர்: எஸ். பாலசுப்ரமணியன்
செயலாளர்கள்: எஸ். காசிநாதன்
கே. நாராயணசாமி.

ஆறு பேர் கொண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விளையாட்டுக் கிளப்பும், வாசகசாலையும், 'வனக் குயில்' என்ற கையெழுத்துப் பத்திரிகையையும் நடத்தப்படுகின்றன. பத்திரிகைக்கு விஷயதானம் செய்ய விரும்புபவர்கள் கே. என். மகாலிங்கம், பி. எஸ். ஆர். பங்களா என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

பேனா நண்பர்கள்:

1. த. குலசேகரன், நெ. 33. மாடக்ஸ் தெரு, வேப்பேரி, சென்னை-7.

2. பி. ரகோத்தமன், ஐந்தாம் படிவம், போர்டு உயர்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி (தெ. ஆ.)

3. என்.பி. பாலசுப்பிரமணியம், 6. நல்லண்ணப்பிள்ளைத் தெரு, கொசப்பேட்டை, வேலூர். (வ. ஆ.)

4. எஸ். எஸ். பி. பெருமாள், வ. உ. சி. வீதி, வள்ளியூர், திருநெல்வேலி ஜில்லா.

5. வி. ராமசுப்பிரமணியன், S/O ஏ. வேலாயுத முதலியார், அகஸ்தியர் கீழ்த் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.

பம்பாய் பேபி கமலா

இந்தக் குறத்தியிடம் கையை நீட்டிக் குறி கேட்கலாமா என்று ஆசையாயிருக்கிறதல்லவா? ஆசையாக இருக்கலாம்; ஆனால் குறி கேட்கத்தான் முடியாது. ஏனென்றால் நீங்கள் ஆயிரம் மைல்போலப் பிரயாணம் செய்து பம்பாய்க்குப் போனால்தான் இவளைப் பார்க்கலாம். அப்படிப் போனாலும் இந்தக் குறத்தி, நீங்கள் தேடிப் போகும்போது குறத்தியாக இருக்கமாட்டாள்; ஏழு வயசுப் பெண்ணாக இருப்பாள். அங்கே போய் அவளைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்றால் அவளுடைய அப்பா ஸ்ரீ. ஏ.எம். ராமநாத் என்பவரைக் கேட்கவேண்டும். மாதுங்காவில் கலாஸதன் என்ற இடத்தில் நாட்டியம் பயின்ற இந்தக் குழந்தையின் நாட்டிய அரங்கேற்றம் சென்ற மாதம் 17-ஆம் தேதி ஆயிரம் பேர் முன்னிலையில் நடைபெற்றது. அபாரமாக நாட்டியமாடி முதல் நாள் அன்றே ஒரு தங்கப் பதக்கத்தையும் தட்டிக்கொண்டு போய்விட்டாள் இவள்!

Reg. No. M. 5542

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஏரிக்கரை மாளிகை

பாட்டி, ராஜா-ராணிக் கதைகள் சொல்வாள்; தாத்தா, மந்திரவாதி - வீரர் கதைகள் சொல்வார். எல்லாம் கேட்கக் கேட்க எங்கேயோ ஒரு தனி உலகத்துக்கு நம்மைக் கொண்டு சென்றுவிடும். ராஜகுமாரன் வருவான்; ராஜகுமாரி வருவாள். வீரன் வருவான்; வாள் கொண்டு சாகஸச் செயல்கள் எல்லாம் செய்வான். அற்புதத்தைச் சாதிப்பான். நாமோ ஆனந்தத்தில் மிதப்போம். அப்படிப்பட்ட புத்தகம்தான் இது. அருமையான படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

விளையும் பயிர்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

நம்மிடையே வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்கள் உங்களைப் போலிருந்த காலத்தில் எப்படி விளையாடினார்கள்? என்ன என்ன குறும்புத்தனங்கள் செய்தார்கள்? காந்திஜி, நேருஜி, டாகுர், பாரதியார், ராஜேந்திரப் பிரஸாத், ஆஸாத், டாக்டர் சாமிநாதையர் முதலிய பெரியார்களுடைய விளையாட்டுப் பருவத்து நிகழ்ச்சிகளைக் கதைபோல ஆசிரியர் வர்ணிக்கிறார்.

விலை 8 அணா

விஞ்ஞானம் பேசுகிறது

ஆசிரியர்கள்:

பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

நாம் தினசரி பல பொருள்களை உபயோகப் படுத்துகிறோம். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களைப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தினம் அரைமணி செலவிட்டால் 12 நாட்களில் தெரிந்து கொண்டுவிடலாம்.

விலை 8 அணா

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.